விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

அன்பு வாசகர்களே...
புருசோத்மன் எழுதும்
தமிழரின் தலைவிதி
இன்று 100-வது தொடர் நிறைவு
தொடர்ந்தும் வாசியுங்கள்...

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 12 திங்கட்கிழமை (28.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

# மதவழிபாட்டிடங்கள் தாக்கப்படுகின்றன!

## ஒரு வாரத்துக்குள் மூன்று பள்ளிவாசல்கள் சேதம்



(கொழும்பு) குருநாகல் பொங்கஹயாய - நாரம்பல பகுதியிலுள்ள பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது அப்பகுதியில் ஒரு வாரத்துக்குள் இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள் மீது நடத்தப்பட்ட மிக மோசமான மூன்றாவது தாக்குதலாகும். (23-வது பக்கம் பார்க்க...)

## கிளிநொச்சியில் வாள் வெட்டு; குடும்பஸ்தர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்றவர் மீது, உழவு இயந்திரத்தில் வருகை தந்த ஒருவர் வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவத்தில் 53 வயது மதிக்கத்தக்க காந்தி கிராம பகுதியை சேர்ந்த கிருபாகரன் என்ற 4 பிள்ளைகளின் தந்தையே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

படுகாயமடைந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில், குறித்த சம்ப 24☛

## வித்தியா படுகொலை வழக்கு
## எதிரிகளுடைய வாக்குமூல பதிவுகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கின் நீதாய விளக்க முறையிலான (ட்ரயல் அட்பார்) விசாரணைகளின் தொடர் விளக்கத்தில், வழக்கின் எதிரிகளுடைய வாக்குமூல பதிவுகள் இன்றில் இருந்து ஆரம்பிக்கப் படவுள்ளது.

இவ் வழக்கின் நீதாய விளக்க் விசாரணைகள், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோண்மலை மேல் நீதி 24☛

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

(குருமன்காடு)

வவுனியா மறவன்குளம், இரண்டாம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் நேற்று மதியம் தூக்கில் தொங்கிய நிலையில் 25 வயதுடைய இளம் குடும்ப பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் ஒருவரும் இல்லாத வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு வந்த உறவினர்கள் தூக்கில் சடலம் தொங்கு 24☛

## வவுனியாவில் 30-ம் திகதி போராட்டம்

(வவுனியா)

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நாளை 24☛

## டெங்கு நோய்த் தாக்கம்; யாழில் சடுதியாக அதிகரிப்பு
### 2016இல் - 600; 2017இல் - 3600

(யாழ்ப்பாணம்)

யாழில் சடுதியாக அதிகரித்துள்ள டெங்குநோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹசித திசேரா உத்தரவிட்டுள்ளார்.

வடக்கில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலின் போதே மேற்குறித்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாவட்டத்தில் 23☛

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக
## வடக்கு, கிழக்கில் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நாளை மறுதினம் 30-ம் திகதி வட கிழக்கில் இடம்பெறும் உறவுகளின் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டங்களுக்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்த வலுச் சேர்த்து ஆதரவளிக்க வேண்டும் என கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

வலிந்து காணாமல் 23☛

## முன்பள்ளி ஆசிரியை சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணம் மட்டுவில் அருகில் வின்சன் வீதியில் 24☛

## கிரிக்கெட் மோசடி; விசாரணை அறிக்கை

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் போது இடம்பெற்ற முறைகேடு குறித்து விசாரணை நட 23☛

## நீதிமன்று, நாடாளுமன்றத்தை அரசாங்கம் ஏமாற்றுகின்றது!
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாடாளுமன்றத்தையும் நீதிமன்றத்தையும் ஏமாற்றி மாகாண சபைத் தேர்தல்களை பிற்போடும் 20 ஆவது சட்டத் திருத்தத்தை தற்போதைய அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெல்லன்வில ரமமகா விகாரையின் 66 ஆவது எசல பெரஹறவில் கலந்துகொள்வதற்கென 24☛

## வர்த்தக நிலையத்தில் தீ விபத்து பெண் காயம்

(பரந்தன்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள கிருஷ்ணபுரம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் நேற்று பிற்பகல் பரவிய தீ காரணமாக இளம் குடும்ப பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தாயார் கண்டித்ததை தாங்காது மகன் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

தாயார் கண்டித்ததை பொறுத்துக் கொள்ள முடியாத மகன் ஒருவன் பரிதாபகரமாக தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளான். இச்சம்பவம் இடைக்குறிச்சி வறணியில் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெற்றுள்ளது. வறணி மத்திய கல்லூரியில் தரம் 9இல் கற்கின்ற பிரஸ்தாப மாணவன் நேற்று காலை தனியார் வகுப்புக்கு செல்லாமல் வீட்டில் நின்றுள்ளான். இதனை கண்ணுற்ற மாணவனின் தாயார் வகுப்புக்கு ஒழுங்காக செல்ல வேண்டும் என மகனை கண்டித்துள்ளார். இதனால் மனமுடைந்த மாணவன் தாய் கடைக்கு சென்றிருந்த நேரத்தில் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். தாய் வீடு திரும்பிய போதே குறித்த சம்பவம் தெரிய வந்துள்ளது. இடைக்குறிச்சி வறணியை சேர்ந்த சந்திரகுமார் நிதுர்சன் (வயது 14) என்ற மாணவனே இதில உயிரிழந்தவராவார். இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-89)

# பேருந்து விபத்தில் சிறை அதிகாரி பலி

(அம்பாறை)

தெய்யத்தகண்டிய பிரதேசத்தில் குடா ஓயா பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். பாலத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்ப ட்டிருந்த பேருந்து திடீரென புரண்டு விழுந்த தில், சிறைச்சாலை அதிகாரி அதில் சிக் குண்டு உயிரிழந்துள்ளார். அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சொந்த மான பேருந்தே இவ்வாறு திடீரென புரண்டு விழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெய்யத்தகண் டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ)

# துயிலும் இல்லம் புனரமைப்பு



(முள்ளிவாய்க்கால்)

ஈழ போராட்டத்தில் களமாடி கொல்லப்பட்ட 1800இற்கு மேற்பட்ட மாவீரர்கள் விதைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் துயிலும் இல்ல புனரமைப்பு பணிகள் நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில், மாவீரர் துயிலும் இல்லங்கள் புனரமைக்கும் பணிகள் தொடர்ச்சியான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லத்தை துப்பரவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த பணியில் பொதுமக்கள், மாவீரர்களின் உறவுகள், ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிரமதானப்பணியை முன்னெடுத்திருந்தனர். (செ)

# வவுனியா ஏ9 வீதியில் இருவேறு விபத்துகள்

## மூவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஏ9 வீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா, தாண்டிக்குளத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று முன்னே சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது மோட்டார் வாகனத்தில் பயணித்த ம.மதுசன் (வயது-23), நா.லோகேஸ்வரன் (வயது-23) ஆகிய இருவரும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, வவுனியா ஓமந்தையில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(செ)

# வடமராட்சி கிழக்கில் யானையால் அச்சநிலை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு பகுதிக்குள் நேற்று காலை யானை ஒன்று புகுந்ததனால் பெரும் அச்சநிலை காணப்பட்டது.

வடமராட்சி கிழக்கின் உடுத்துறை மற்றும் ஆழியவளை ஆகிய இரண்டு கிராமங்களிற்குள் யானை புகுந்ததாகவும் இதன்போது யானையின் தாக்குதலில் இருந்து ஒருவர் மயிரிழையில் தப்பியதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரனிற்கு இது குறித்து அப்பகுதி மக்கள் தெரிவித்ததையடுத்து அவர் இது விடயமாக வனவள பாதுகாப்புப் பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினருக்கு அறிவித்தார்.

சம்பவ இடத்திற்கு அனைவரும் வரவழைக்கப்பட்டு காட்டுப்பகுதிகளை அண்டிய பகுதிகளில் தேடுதல்கள் மேற்கொண்ட போதும் அவ் யானையினைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

திடீரென வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு யானை ஒன்று வந்திருப்பதையிட்டு அப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-60)

## கடந்த 3 1/2 ஆண்டுகளில்

# 1, 746 தமிழக மீனவர்கள் இலங்.கடற்படையால் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரால் கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஆயிரத்து 746 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டில் 787 மீனவர்களும், 2015ஆம் ஆண்டில் 454 மீனவர்களும், 2016ஆம் ஆண்டில் 290 மீனவர்களும், 2017ஆம் ஆண்டு தற்போது வரை 215 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என அரசின் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 37 படகுகள் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் அதில் தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே இலங்கை சிறையில் இருந்த மீனவர்களை சேர்த்து கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஆயிரத்து 953 பேர் பேச்சுவார்த்தை மூலம் விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

துப்பாக்கி சூடு சம்பவத்தை பொறுத்தவரை இவ்வருடத்தில் மார்ச் மாதம் பிரிட்ஜோ என்ற மீனவர் மீது நடத்தப்பட்ட சம்பவம் மட்டும் தான் நிகழ்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதையும் இலங்கை அரசு மறுத்திருக்கிறது என மத்திய அரசு விளக்கியுள்ளது. இந்திய மீனவர்கள் சர்வதேச எல்லையை தாண்டுவதை தடுக்க பல்வேறு பயிற்சிகள் மத்திய அரசின் சார்பில் கொடுக்கப்பட்டு வருவதாகவும், இதற்காக இந்த ஆண்டு 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)


## தேவை

முல்லைத்தீவு பகுதியில் தென்னந் தோட்டம் ஒன்றில் தங்கியிருந்து பாரமற்ற வேலைகளை மட்டும் செய்வதற்கு அனுபவமுள்ள ஆண்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
0771681697

(சி-8345)


# பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கு நேற்றுக் கொடியேற்றம், செப்.12 தேர்



(பொன்னாலை)

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய ஏவிளம்பி வருட மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்று அதிகாலை இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து பகல் 11.30 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்றது.

நேற்றைய கொடியேற்றத் திருவிழாவில் ஈழத்தின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி இரதோற்சவம் இடம்பெற்று மறுநாள் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

வழிபாட்டிற்காக வரும் பக்தர்களின் வசதி கருதி ஆலயத்தைச் சுற்றி தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பொன்னாலை கண்ணன் மடாலயம், பொன்னாலைச் சந்தியில் உள்ள நாராயணன் தண்ணீர்ப்பந்தல் சேவை போன்ற இடங்களில் அன்னதானம் வழங்கப்படுகிறது. இந்தச் சேவை திருவிழாக் காலங்களில் தினந்தோறும் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஆலயத்திற்குச் செல்லும் மக்களின் வசதி கருதி யாழ்ப்பாணம்-காரை நகர் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தும் நேற்று தொடக்கம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தினூடாகவே சேவைகளை மேற்கொண்டுள்ளன.

விசேடமாக பக்தர்களின் நலன் கருதி வட்டுக்கோட்டைப் பொலிஸார் 24 மணி நேரப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது (செ-9)


## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

# பொது அறிவித்தல்

வழ.இல-TR/178/17

வல்வெட்டித்துறை வடமேற்கு ஜே/388 கிராம அலுவலர் பிரிவில் வதிபவர்கள் சார்பாக வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவிலின் வருடாந்த மகோற்சவத்தின் 11ஆவது திருவிழா உபயம் தொடர்பாக வழக்கு நடத்தப்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளதென அக்கறையுள்ள அனைவருக்கும் குடியியல் நடவடிக்கைச் சட்டக் கோவையின் 16ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இவ் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

தேவராஜன் ரெங்கன்
வழக்காளியின் சட்டத்தரணி

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

(209)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மீது முன்வைக்கப்பட்டுள்ள

# குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் பல நிறுவனங்கள் உண்டு - ராஜித



தனக்கு எதிராக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளின் பின்னணியில் பல நிறுவனங்கள் இருப்பதாக சுகாதார மற்றும் போசணைத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

புகையிலை மற்றும் ஔடத நிறுவனம் தொடர்பாக தாம் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அந்த நிறுவனங்கள் தமக்கு எதிராக செயற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு சுயாதீனமாக செயற்படுவதனால் எதிர்காலம் ஒன்று இருக்காது என அமைச்சர் நவீன் திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

குளியாப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அந்த கருத்தை வெளியிட்டார்.

அத்துடன் நாடு புதிய அரசியல் பயணத்தை நோக்கி காலடி எடுத்து வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (3-7)

# அரச சேவையாளர்கள் சுயாதீனமாக செயற்பட வாய்ப்பு வழங்க வேண்டும்

## தேசிய தொழிற்சங்க சம்மேளனம் வலியுறுத்து

அரச பணியாளர்களுக்கு சுயாதீனமாக செயற்பட வாய்ப்பு வழங்க வேண்டும் என தேசிய தொழிற்சங்க சம்மேளனம் கோரியுள்ளது.

அரசியல் ரீதியான நியமனங்கள் மற்றும் அரசியல் ரீதியான தொழிற்சங்கங்கள் காரணமாக அரச சேவைகளைப் பெற பொதுமக்கள் பாரிய சிக்கல்களுக்கு உள்ளாகியிருப்பதாக அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அரச பணிகளை சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்வதற்காக அரசியல் தலையீட்டுடனான நியமனங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.

பரீட்சைகள் ஊடாக மற்றும் பொலிஸ் அறிக்கைகளை உள்ளடக்கிய வகையில் அனைத்து ஆவணங்களையும் கவனத்தில் கொண்டு தொழில்வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்றும் அந்த சம்மேளனம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சியினருக்கு ஐ.தே.கவினரால் அச்சுறுத்தல்

கொடகவல வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் குழுவொன்றினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கூட்டு எதிர்க்கட்சி குற்றம்சாட்டியுள்ளது. ஹம்பேவெல வஜிராம விகாரைக்கு வருகை தந்த குண்டர்கள் குழுவொன்று அங்கிருந்த அதிகாரிகளுக்கு எச்சரித்ததுடன் தாக்குதலும் நடத்தியதாக கூட்டு எதிர்க்கட்சியின் பிரதி அமைப்பாளர் ரஞ்ஜித் எம்.பி. கூறியுள்ளார்.

மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக தேர்தல் நடைபெறும் நிலையில், ஐ.தே.க. ஆதரவாளர்கள் இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். இத்தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சிக்கு வெற்றிபெற முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நீதியமைச்சர் குறித்து மகிந்த கூடிய கவனம்

புதிய நீதியமைச்சராக பதவியேற்றுள்ள தலதா அத்துகோரள தனது பணிகளை செய்யும்விதம் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஆலயத்தில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எமக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதில்லை, நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுப்பதில்லை ஆகிய காரணங்களை கூறி முன்னர் பதவியில் இருந்த நீதியமைச்சரை நீக்கினர்.

இதனால், தற்போது பதவியேற்றுள்ள நீதியமைச்சருக்கு இவை அனைத்தையும் மேற்கொள்ள வேண்டியேற்படும் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# குடும்பஸ்தருக்கு விளக்க மறியல்

திருகோணமலை - ஜயந்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதுடைய சிறுமியொருவரை, துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முற்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் துசித்த தம்மிக்க நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

கந்தளாய், வான்எல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர், வீட்டில் தனிமையில் இருந்த சிறுமியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முற்பட்டதாக, சிறுமியின் பெற்றோரால் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய, அவரை கடந்த 25ஆம் திகதி கைதுசெய்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரின் மனைவி வெளிநாடு சென்று சென்றுள்ளதாகவும், சந்தேக நபர் வீட்டில் தனியாக வாழ்ந்து வந்ததாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-7)

# மோ.சைக்கிள் ஓட்டுநருக்கு அதிகூடிய அபராதம் விதிப்பு

பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் மோட்டார் சைக்கிள் ஓட்டிய ஒருவருக்கு முதல் முறையாக அதிகூடிய அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஒரு லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் அபராதமாக செலுத்துமாறு குறித்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கு பலபிட்டிய நீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவருக்கு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட அதிகூடிய அபராதம் இதுவென கருதப்படுகின்றது. மோட்டார் சைக்கிளின் எண்ணை மாற்றுதல், சைலன்ஸர் பீப்பாயை மாற்றி அதிக சத்தத்தில் பயணித்தமை, போலி இலக்கத் தகடு பயன்படுத்திய காரணங்களுக்காக இந்த மோட்டார் சைக்கிள் பட்டபொல பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மனித உரிமை ஆர்வலர் விபத்தில் சிக்கி மரணம்

மனித உரிமை ஆர்வலர் விஜய் நாகராஜ் வாகன விபத்தில் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பிற்கு செல்லும் போது இடம்பெற்ற கார் விபத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

44 வயதான விஜய் நாகராஜ் சர்வதேச மன்னிப்புச் சபையின் (Amnesty International) இந்தியாவின் முன்னாள் இயக்குநராவார்.

அவர் சுமார் 10 வருடங்களாக இலங்கையின் சட்டம் மற்றும் சமூகம் ஆய்வு குழுவில் மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான தலைவராக பணியாற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தகவல் உரிமைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாக நாகராஜ் கர்ணப்பட்டுள்ளார். நாகராஜின் குடும்பத்தினர் பெங்களூரில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அலரி மாளிகையில் ரவிக்கு அலுவலகம்

வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு நிகரான அதிகாரங்களுடன் கூடிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

அவருக்கு அரச இலச்சினையுடன் கூடிய கடித தலைப்புகளில் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

அலரி மாளிகையில் இலக்கம் 105 என்ற அறையில் ரவி கருணாநாயக்கவின் அலுவலகத்தை நடத்திச் செல்ல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் 2017 என்ற பெயரிலான திட்டத்தின் பதவியே ரவி கருணாநாயக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கு கடந்த 22 ஆம் திகதி அனுப்பியுள்ள கடிதம்மூலம் இந்த தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# மகா சங்கத்தினரின் பேச்சை அரசு கேட்பதில்லை-பிரசன்ன



அரசாங்கம் மகா சங்கத்தினரின் பேச்சை கொஞ்சம் கூட செவிசாய்க்காது செயற்பட்டு வருவதாக முன்னாள் முதலமைச்சரும் கூட்டு எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தற்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மகா சங்கத்தினரின் ஆதரவு இல்லாமல் போயுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் உள்ள இந்த அரசாங்கத்தில் தேரர்களின் தலை வெடிக்க அடிக்கின்றனர். இந்த அரசாங்கத்தில் 68 தேரர்கள் அரசியல் பழிவாங்கலுக்காக சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த தேரர்கள் சொல்வதை இந்த அரசாங்கம் கேட்கிறதா? அஸ்கிரிய மகா நாயக்க தேரர் விஜயதாஸ ராஜபக்ஷவை நீக்க வேண்டாம் எனக் கூறினார். அவர் திருடர் அல்லவெனவும், அவர் நாட்டுக்காக செயற்பட்ட ஒருவர். பௌத்த மதத்துக்காக குரல் கொடுத்த ஒருவர் எனவும் அஸ்கிரிய மகா நாயக்க தேரர் கூறினார்.

இதுதான் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கையா? எனவும் பிரசன்ன ரணதுங்க கேள்வி எழுப்பினார். (3-7)

# 3 அமைச்சர்களுக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அமைச்சர்களான டிலான் பெரேரா, சுசில் பிரேமஜயந்த மற்றும் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகிய மூவருக்கெதிராகவே இவ்வாறு ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்று அமைச்சர்களும் அரசாங்கத்தில் இருந்து கொண்டே அரசாங்கத்தின் மீதும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்கள் மீதும் பகிரங்கமாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவருவதாகவும் இதனால் அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தி கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு குறித்த மூன்று அமைச்சர்களுக்கு எதிராக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளை அடுத்தே தாம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் ஐக்கிய தேசிய கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் குறித்த மூன்று அமைச்சர்களும் அரசாங்கத்தையும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களையும் கடுமையாக விமர்சித்து வருவதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே தற்போது அவர்களுக்கு எதிராக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பும்ராவின் வேகமும் ரோகித்தின் துடுப்பாட்டமும் கைகொடுக்க

# இரசிகர்களின் ரகளைகளுக்கு மத்தியில் தொடரை வென்றெடுத்தது இந்தியா



இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் ரோகித் சர்மா அபாரமாக விளையாடி சதம் அடிக்க, இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்று, தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இலங்கை சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் வென்ற இந்திய அணி, தொடரில் 2:0 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் மூன்றாவது ஒரு நாள் போட்டி கண்டியில் உள்ள பல்லேகலேயில் நேற்று நடந்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இலங்கை அணியில் தரங்க, குணதிலகவுக்குப் பதிலாக சண்டிமல், திரிமன்னே இடம்பெற்றனர். இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

### பும்ரா அபாரம்

இலங்கை அணிக்கு ஆரம்பத்திலேயே பும்ரா தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' டிக்வெல (13), குசல் மெண்டிஸ் (1) சிக்கினர். பின், இணைந்த சண்டிமல், திரிமனனே ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிபபடுத்தியது. பாண்ட்யா பந்தில் சண்டிமல் (36) ஆட்டமிழந்தார். திரிமன்னே (80) அரைசதம் அடித்தார். மத்யூஸ் (11), அணித் தலைவர் கபுகெதர (14) விரைவில் திரும்பினர்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்கள் எடுத்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அசத்திய பும்ரா 27 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### ரோகித் சதம்

எளிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஷிகர் தவான் (5) ஏமாற்றினார். பெர்னாண்டோ 'வேகத்தில்' சிக்கிய அணித் தலைவர் ஹோலி (3) அதிர்ச்சி தந்தார். தனஞ்செய பந்துவீச்சில் லோகேஷ் ராகுல் (17), ஜாதவ் (0) ஆட்டமிழந்தனர். அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரிந்தாலும் ரோகித் சர்மா பொறுப்புடன் விளையாடினார். தனஞ்செய பந்தை சிக்ஸருக்கு அனுப்பிய இவர், ஒரு நாள் அரங்கில் 12ஆவது சதம் கடந்தார்.

### தோனி அரை சதம்

இவருக்கு ஒத்துழைப்பு தந்த தோனி அரைச்சதம் அடித்தார். இந்திய அணிக்கு 36 பந்தில் 8 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், ரசிகர்கள் 'பவுண்டரி லைன்' அருகே குடிநீர் போத்தலை எறிந்தனர். இதனால், போட்டி 35 நிமிடங்கள் தடைப்பட்டது. மீண்டும் ஆரம்பித்த போட்டியில் இந்திய அணி 45.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுக்களால் தொடரை வென்றெடுத்தது.

ரோகித் சர்மா (124), தோனி (67) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் ரோகித் சர்மா தெரிவானார்.

இரண்டு போட்டிகள் மீதமுள்ள நிலையில் இந்திய அணி 3:0 என தொடரை வென்றது.


இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது போட்டி கொழும்பில் எதிர் வரும் 31ஆம் திகதி நடக்கிறது.

மிர்பூர் டெஸ்ட் 1ம் நாள்

## ஆஸியின் வேகமும் சுழல்களும் ஜொலிக்க

# 260 ஓட்டங்களில் சரிந்தது பங்களாதேஷ்

# அவுஸ்திரேலியாவின் ஆரம்பமும் சறுக்கலில்



கம்மின்ஸின் வேகத்தில் முதல் மூன்று விக்கெட்டுக்களை 10 ஓட்டங்களுக்கு இழந்து தடுமாற ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு, ஆரம்ப அதிரடி துடுப்பாட்ட வீரர் தமீம் இக்பாலும் சகலதுறை வீரர் சகீப் அல் ஹசனும் இணைந்து 4ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த பெறுமதி வாய்ந்த 155 ஓட்டங்கள் அணியின் சரிவை தடுத்து நிறுத்தியதுடன் சுமாரான மொத்த ஓட்ட எண்ணிக்கையும் பெற வழிகோலியது.

• தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக களமிறங்கிய அவுஸ்திரேலியா வோர்னர், கவாஜா, லயன் ஆகியோரின் விக்கெட்டுக்களை முதல் நாள் ஆட்டம் நிறைவடைய 4 ஓவர்கள் இருக்கையில் அடுத்தடுத்து இழந்து (3/18) சரிவான ஆரம்பத்தை கண்டுள்ளது.

பங்களாதேசுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா அணி அங்கு 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் மிர்பூரில் நேற்று ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு தமீம் இக்பால் - சவுமியா சர்கர் இணை ஆரம்பம் வழங்கியது.

அணியின் ஓட்டஎண்ணிக்கை 10 ஓட்டங்களாக இருக்கும்போது சவுமியா சர்கரை 8 ஓட்டங்களுடன் வெளியேற்றிய கம்மின்ஸ், அதன்பின் துடுப்பெடுத்தாட வந்த இம்ருல் கெய்ஸ், சபீர் ரஹ்மான் ஆகியோரை ஓட்டம் ஏதும் எடுக்க விடாமல் தனது வேகத்தால் பெவிலியன் நோக்கி திருப்பி அனுப்பினார்.

இதனால் பங்களாதேஷ் அணி 10 ஓட்டங்கள் எடுப்பதற்குள் முன்னணி 3 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக தமீம் இக்பால் உடன் சஹிப் அல் ஹசன் ஜோடி சேர்ந்தார். அனுபவ வீரர்களான இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் பங்களாதேஷ் அணியின் ஓட்டஎண்ணிக்கை 100-ஐ தாண்டியது. இருவரும் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தனர்.

அணியின் ஓட்டஎண்ணிக்கை 165ஐ எட்டியபோது இந்த ஜோடி பிரிந்தது. சிறப்பாக விளையாடிய தமீம் இக்பால் 71 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மக்ஸ்வெல் பந்தில் ஆட்டம் இழந்தார். இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு 155 ஓட்டங்களை பகிர்ந்து அணியை சரிவில் இருந்து மீட்டது. தமீம் இக்பால் ஆட்டமிழந்த சிறிது நேரத்தில் சஹிப் அல் ஹசன் 84 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அதன்போது பங்களாதேஷின் நிலைமை 5/188 என்றானது.

6ஆவது விக்கெட்டுக்காக அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம் உடன் நசிர் ஹொசைன் ஜோடி சேர்ந்தார். முதல் நாள் தேநீர் இடைவேளை வரை பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 190 ஓட்டங்கள் எடுத்திருந்தது. முஷ்பிகுர் ரஹிர் 12, நசிர் ஹொசைன ஓட்டம் ஏதும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

தேநீர் இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியதும் முஷ்பிகுர் ரஹிம் 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஷ்டோன் ஏகர் பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த மெஹிடி ஹசன் மிராஸ் 18, நாசிர் ஹொசைன 23, தைஜுல் இஸ்லாம் 4, ஷபியுல் இஸ்லாம் 13 ஓட்டங்களில் ஆட்டம் இழக்க பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 78.5 ஓவர்களைச் சந்தித்து 260 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் கம்மின்ஸ், லயன் மற்றும் அஷ்டோன் ஏகர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர், ரென்ஷா ஆகியோர் ஆரம்பம் வழங்கினர்.



அணியின் ஓட்டஎண்ணிக்கை 9ஆக இருக்கும்போது 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வோர்னர் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த கவாஜா ஒரு ஓட்டத்தில் ரன்அவுட் ஆனார். முதல் நாள் ஆட்டம் முடிவடைய 2 ஓவர்களே இருந்ததால் லயன் நைட்வாட்ச் மேனாக களம் இறக்கப்பட்டார். இவரை ஓட்டம்ஏதும் எடுக்க விடாமல் சஹிப் அல் ஹசன் எல்.பி.டபிள்யூ ஆக்கினார். இதனால் அவுஸ்திரேலியா அணியும் ஆரம்ப விக்கெட்டுக்களை (3/14) விரைவாக இழந்து தத்தளித்தது.

4ஆவது விக்கெட்டுக்கு ரென்ஷா உடன் அணித் தலைவர் ஸ்மித் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி முதல் நாள் ஆட்டம் முடியும் வரை மேலும் விக்கெட் ஏதும் இழக்காமல் பார்த்துக் கொண்டது. ரென்ஷா 6, ஸ்மித் 3 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வர அவுஸ்திரேலியா 9 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 18 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

பந்துவச்சில் ஷகிப் அல் ஹசன், மொஹிடி ஹசன் ஆகியோர் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்றைய 2ஆவது நாள் ஆட்டம் தொடங்கியதுமே ஸ்மித், ரென்ஷா ஆகியோரின் விக்கெட்டுக்களை பங்களாதேஷ் விரைவில் வீழ்த்திவிடும் பட்சத்தில் அவுஸ்திரேலியா கடும் நெருக்கடிக்குள்ளாகும்.



டெவோர்டிவோ அணிக்கு எதிரான லா லிகா போட்டியில் பார்சிலோனா அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இப்போட்டியில் அபாரமாக செயற்பட்ட லயனல் மெஸ்ஸி 2 கோல்கள் அடித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



World Class UK Degree @ICBT Jaffna Campus

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

Apply now for New Intake 2017

# ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

TVEC REGISTERED

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

## BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

UGC RECOGNIZED

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes


0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk





World Class British IT Degree Programme @ ICBT Jaffna Campus

Apply Now For New Intake 2017

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

# ICBT DUAL HNDs Software Engineering + Computing

Duration 2 Years

Cardiff Metropolitan University

UGC RECOGNIZED

## BSc (Hons) SOFTWARE ENGINEERING

Offered by Cardiff Metropolitan University, UK

Duration 1 year

Entry Qualifications

Higher National Diploma in Computing/ IT/ Networking/ Systems Development or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes

A/L | O/L → HND → BSc

DEGREE COMPLETION IN SRI LANKA

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk





World Class British Degree @ ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

# ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

## BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector



Cardiff Metropolitan University



SRI LANKA'S MOST ACCEPTED BRITISH

# MBA

MASTER OF BUSINESS ADMINISTRATION in Jaffna

(4th Batch in Jaffna)

This MBA is aimed at those who are looking to develop their careers and at 'High Flyers' that need and understanding of all the major functions of business.

In addition to enhancing successful student's career prospects. This programme is delivered in Sri Lanka at ICBT Campus and is the identical programme conducted in UK.

Entry Qualification
- Degree in Business or related areas
- Any other Degree or Equivalent + 2 Years Working experience.
- DBF + 2 Years of Banking service
- Any other part qualification with not less than 5 Years of Managerial level work experience would be considered.

(C-9350)

- Classes only on Sundays
- Hurry-up to claim early-bird discount

REGISTRATION NOW ON FOR SEPTEMBER INTAKE - 2017

TEF Silver

Cardiff Metropolitan University has been awarded the Silver Teaching Excellence Framework (TEF) rating in the recent results published by the Higher Education Funding Council for England (HEFCE) - UK.

ICBT CAMPUS JAFFNA | EQAA | National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013

More Information 0770 746 553
merojan@icbtcampus.edu.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனசமூக நிலையங்களுக்கான தளபாடங்கள் வழங்கப்பட்டன



2017ஆம் ஆண்டுக்கான வட மாகாண சபை யின் குறித்தொதுக்கப்பட்ட நிதி யொதுக்கீட்டின் கீழ் தாவடி காளியம்பாள் சனசமூக நிலையம், சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் சன சமூக நிலையம் ஆகியவற்றுக்கான தளபாடங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வலி.தெற்கு பிரதேசச்சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இரு சனசமூக நிலையங்களுக்குமான தளபாடங்கள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனால் குறித்த நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாகாணசபை உறுப்பினருடன், வலி.தெற்கு பிரதேசசபையின் செயலாளர் சுதர்சன், வலி.தெற்கு பிரதேச சபையின் சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.மலர்மகள் மற்றும் குறித்த சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-3)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-வண்ணை பிறவுண் வீதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 30 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். எதிர்வரும் 9.9.2017 சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா இடம் பெறவுள்ளது. (இ-3)



தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் 90ஆவது பிறந்ததினம் நேற்று முன்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் நடைபெற்றபோது ...

# தியான கற்கை நெறியின் புதிய பிரிவுகள் ஆரம்பம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணக்களத்தினால் இலவசமான முறையில் நடத்தப்பட்டுவரும் யோகா- தியான கற்கை நெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 02.09. 2017 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கபட்டுள்ளது. இவ் வகுப்புக்கள் நல்லூர் ஆலயத்தின் முன்றலில் அமைந்துள்ள ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் வார இறுதி நாட்களில் நடைபெறும். அத்துடன் ஆண்கள், பெண்களுக்கு தனித்தனிப் பிரிவுகளாக நடத்தப்படவிருக்கின்றன. ஆண்களுக்கான பிரிவு சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரையிலும் பெண்களுக்கான பிரிவு அதே நாட்களில் காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரையிலும் நடைபெறவுள்ளதுடன் நோயாளர்களுக்கும் விசேட கவனமெடுத்துக் கற்பிக்கப்படும். அத்துடன் சுமார் 3 மாத காலங்களை உள்ளடக்கிய இக் கற்கை நெறியைப் பூரணமாக பூர்த்தி செய்பவர்களுக்கு திணைக்களத்தால் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே முற்றிலும் இலவசமாக நடைபெறும் யோகா- தியான வகுப்புக்களில் இணைந்து பயன் பெற விரும்பும் இருபாலாரும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தமது பதிவுகளை கற்கை நெறி ஆரம்பமாகும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்போ மேற்கொண்டு இணைந்து கொள்ள முடியும் எனவும் மேலதிக தகவல்களை அலுவலக நேரத்தில் மேற்படி மண்டபத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 15 வருட காலமாக தொடர்ச்சியாக இவ் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதுடன் ஏராளமானோர் பயிற்சியை பூரணமாக முடித்து வெளியேறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-102)

# விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஊரெழு பிள்ளையார் கோவில் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற நபர் மீது பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் மோதியது. இதில் புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த நாதன்சரவணபவான்(வயது56) என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்ததோடு மோட்டார் சைக்கிளில் வந்த 19 வயதுடைய இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-10-30)

# ஹயஸ்வான் மோதி மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவன் மீது பின்னால் வந்த ஹயஸ் வான் மோதியதில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் படுகாயமடைந்தார்.

அதேவேளை குறித்த வாகனத்துடன் சாரதி தப்பி யோடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் யாழ். மனோகரா சந்தியில் இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த மாணவன் மீது வேகமாக வந்த ஹயஸ் வான் மோதியதில் உதய குமார் கீர்த்தி (வயது-24) என்ற பல்கலைக்கழக மாணவனே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுவருகின்றனர். (இ-10-30)

# ஆன்மீக நிகழ்வுகளில் இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் இடம்பெறும். இதில் செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை, பிரசங்கம் ,யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவின் சத்சங் என்பன இடம் பெறும். (இ-3)



காங்கேசன்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு நிகழ்வு காங்கேசன்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.ஜ.அபேரட்ண தலைமையில் அண்மையில் நடை பெற்றது. (படங்கள் -இளவாலை செய்தியாளர்.)

# இராசி பலன்

. 28.08.2017
(ஆவணி 12, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி பின்னிரவு 2.11 மணிவரை
விசாகம் முன்னிரவு 10.33 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி மாலை 4.06 மணிக்கு விருட்-சந் | | ராகு, சுக், செவ், புத |
| கேது | | | சூரி |
| | சனி, சந் | | குரு |

**மீனம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், களஸ்திர நன்மையுண்டு.

**இடபம்** முக்கிய காரியங்களை காலைப் பொழுதே நிறைவேற்றுவது வெற்றிதரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** வீண் பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், நண்பர்கள் மூலம் சுபதகவல்கள் வந்து சேர வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அதிஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்** செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், ஆதாயம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும்.

**தனுசு** குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்படலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இடம் மாற்ற[illegible]

**துலாம்** நண்பர்கள் பக்கபலமாக நடந்து கொள்வர், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணப் பிரச்சினைகள் சாதகமாக அமையும்.

**கன்னி** வார்த்தைகளில் நிதானம் தேவை, வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பீர்கள், செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?





17.05.2015 ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் புங்குடுதீவில் இருந்து ஆட்டோ மூலமாக யாழ்ப்பாணத்திற்குச் செல்லவிருந்த சுவிஸ்குமார் வேலணைத் துறையில் பொதுமக்களிடம் சிக்கி தர்மஅடி வாங்கிக்கொண்டு புங்குடு தீவு திரும்பினார்.

பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தபோதிலும் அவர்கள் வராததன் காரணமாக சுவிஸ்குமார் வீடு செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆலடிச்சந்தியில் உள்ள சுவிஸ்குமாரின் வீட்டிற்கு அவர் சென்றிருந்த போதிலும் தனது சகாக்கள் கைதா கிய பின்னர் புங்குடுதீவில் தான் இருப்பது பேராபத்து என்பதைப் புரிந்து கொண்டு



அங்கிருந்து வெளி யேறுவதற்கான முயற்சி யில் ஈடுபட்டார் என்று அறிய வருகிறது.

18.05.2015 திங்கட் கிழமை அன்று மதியவேளை, கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் வி.ரி.தமிழ்மாறன் புங்குடு தீவுக்கு வந்துள்ளார்.

சட்டத்துறையில் நிபுணத் துவம் உடைய வி.ரி. தமிழ் மாறனின் சொந்த இடம் புங் குடுதீவு. எனவே வி.ரி.தமிழ் மாறன் புங்குடுதீவுக்கு வரு வது தொடர்பில் எவரும் பிரஸ்தாபிக்க முடியாது.

உயர்ரக வாகனத்தில் புங்குடு தீவுக்கு வந்த வி.ரி.தமிழ்மாறன் தனது வாகனத்தில் சுவிஸ்குமாரை ஏற்றிச் சென்றுள்ளார். கூடவே வாகனத்துக்குள் இருவர் இருந்துள்ளனர்.

சுவிஸ்குமாரைத்தான் ஏற்றிச் சென்றது உண்மை என்றும் பொலிஸாரிடம் ஒப்படைக்கவே அவ்வாறு தான் செய்ததாகவும் வி.ரி.தமிழ்மாறன் பின்னர் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்திருந் தார்.

ஆக, வி.ரி.தமிழ்மாறன் தனது வாகனத்தில் சுவிஸ்குமாரை ஏற்றிச் சென்றார் என்பது இங்கு ஊர்ஜிதப் படுத்தப்படுகிறது.

அதேநேரம் புங்குடுதீவில் இருந்து தனது வாகனத்தில் ஏற்றிவந்த சுவிஸ்குமாரை பொலிஸில் ஒப்படைத்தேன். பின்னர் சுவிஸ்குமார் கொழும்பு சென்றது எப்படி? எங்ஙனம் அவரால் கொழும்பு செல்ல முடிந்தது என்ற கேள்விகளை வி.ரி. தமிழ்மாறன் தனது ஊடக அறிக்கையில் எழுப்பியுள்ளார்.

18.05.2015 அன்று வி.ரி. தமிழ் மாறனின் வாகனத்தில் சுவிஸ்குமார் சென்றார் என்பதோடு அன்றைய தினம் மௌனமாகக் கழிந்து போனது.

மறுநாள் 19.05.2015ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வித்தியாவின்

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

படுகொலையைக் கண்டித்து யாழ். குடாநாடு முழுவதிலும் கடையடைப்பு, ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

மாணவி வித்தியாவின் படு கொலையால் வேதனைப் பட்ட யாழ்.குடாநாடு ஒரு நீதியான போராட்டம் இதுவெனக் கருதி பூரண ஹர்த்தாலைத் தாமாகவே முன் வந்து செய்தனர்.

இவை நடக்கும் அதே வேளை 19 ஆம் திகதி புங் குடுதீவில் உயர்மட்டப் பாது காப்புக் கூட்டம் ஒன்று ஏற் பாடு செய்யப்பட்டது.

புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் வி.ரி.தமிழ்மாறனின் தலைமையில் இக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண உதவிப் பொலிஸ்மா அதிபர், ஊர்காவற்றுறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வேலணை பிரதேச செயலர், வேலணை பிரதேச சபைத் தலைவர், புங்குடுதீவைச் சேர்ந்த புத்திஜீவிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உயர்மட்ட மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய வி.ரி. தமிழ்மாறன் தனதுரையில், புங்குடுதீவில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியதோடு குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

தலைவரின் உரையைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளின் கருத்துக்களும் சபையில் பகிரப்பட்டன.

இவை நடந்து கொண்டிருக்கும் போது குறித்த உயர்மட்ட மாநாட்டில் பங்குபற்றி யிருந்த புங்குடுதீவு அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு கொழும்பில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

அதில் சுவிஸ்குமார் வெள்ளவத்தையில் நிற்கிறார் என்ற செய்தி சொல்லப்பட அதிர்ந்து போன அந்த அரச உத்தியோகத்தர் குறித்த செய்தியை அங்கிருந்த பேராசிரியர் ஒருவரின் காதில் இரகசியமாகக் கூறினார்.

பேராசிரியரும் இச்செய்தியை இரகசியமாக மாநாட்டுத் தலைவருக்கு தெரியப்படுத்தினார்.

எனினும் அந்தச் செய்தி தொடர்பில் எந்தச் சலசலப்பும் அது வரை ஏற்படவில்லை. இந்நிலையில் சபையோர் கருத்திற்கு இடம் கொடுக்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் எழுந்த வேலணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராஜா சுவிஸ்குமார் என்பவர் தற்போது கொழும்பில் நிற்பதாக அறியப்படுகிறது.

இதன் உண்மைபொய் பற்றி எனக்குத் தெரியாது. அது பற்றித் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எனினும் அதற்கும் உயர் பாதுகாப்பு மாநாட்டில் பதில் கிடைக்க வில்லை.

இச் சந்தர்ப்பத்தில் கொழும்பில் இருந்து இரண்டாவது தொலைபேசி அழைப்பு வருகிறது.

இந்த அழைப்பு புங்குடு தீவு அம்பலவாணர் அரங்கடியைச் சேர்ந்த மாதர் சங்கத் தல்லவி சுலோசனா வுக்கு வந்திருந்தது. சுவிஸ் குமார் வெள்ள வத்தையில் நிற்கிறார்.

நீங்கள் இங்கு என்ன செய்கிறீர்கள் என்று அந்த தொலைபேசிச் செய்தி அமைய, வீறு கொண்டெழுந்த மாதர் சங்கத் தலைவி சுலோசனா, எல்லாவற்றையும் முதலில் நிறுத்துங்கள்.

சுவிஸ்குமார் வெள்ளவத்தையில் நிற்கிறார். இதற்கு முதலில் பதில் சொல்லுங்கள் என்று ஆவேச மாகக் கூற மாநாட்டில் இருந்தவர்களும் அதற்கு ஆதரவாகக் குரல் கொடுக்க மாநாடு கலங்கியது.

மாநாட்டிற்கு உள்ளும் புறமும் ஒரே ஆர்ப்பரிப்பு. நேற்றைய தினம் (18.05.2015) உங்களின் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட சுவிஸ்குமார் எப்படி கொழும்பு சென்றார்? வி.ரி. தமிழ்மாறன் அவர்களே! பதில் கூறுங்கள் என்று கோஷம் முழங்க நிலைமையைக் கட் டுப்படுத்துவது கடினமாகிப் போயிற்று.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் நெல் களஞ்சியம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. 35 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள நெற் களஞ்சியத்திற்கான அடிக்கல்லினை கிராமிய பொருளாதார அமைச்சின் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி நாட்டிவைத்து பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்துள்ளார்.

(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# அரச தாதிய உத்தியோகத்தர்கள் ஒருநாள் வேலைநிறுத்தம்

வடமாகாண அரசதாதிய உத்தியோக சங்கத்தினால் சில கோரிக்கைகளை முன்வைத்து ஒருநாள் வேலைநிறுத்தத்தை நாளைய தினம் மேற்கொள்ளவுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

TA/G/PSM/13/2016 ஆம் இலக்க 02.06.2017 ஆம் திகதிய சுற்றுநிருபம் மூலம் வெளியிடப்பட்ட புதிய மேலதிக நேரக் கொடுப்பனவை நடைமுறைப்படுத்தாமை மேலதிக நேர கொடுப்பனவின் நிலுவையை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை, தாதிய உத்தியோகத்தர்களது பதவி உயர்வின் போதான மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவையை வழங்காமை போன்ற கோரிக்கையை முன்வைத்தே வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர்களது கொடுப்பனவு சம்பந்தமான மற்றும் ஏனைய விடயங்களிலும் நடைமுறைப்படுத்தலில் தோல்வியடைந்த மாகாணமாக வடமா காணமே உள்ளது என்பதனை தங்களுக்கு தெரிவிப்பதோடு இது வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களது தொழில் துறையை கடுமையாக பாதிக்கின்ற செயற்பாடாகவே உள்ளது.

இவ் ஒருநாள் வேலை நிறுத்தமானது நாளைய தினம் முற்பகல் தொடக்கம் மறுநாள் 30.08. 2017 மு.ப வரை நடைபெறும் என்பதனையும் நோயாளர்களினதும், பொது மக்களினதும் நன்மை கருதி வேலை நிறுத்தத்தின் போது உயிர்காப்பு நடவடிக்கைக்கான அவசர சிகிச்சைக்கு மாத்திரம் தாதிய உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

இவ் வேலை நிறுத்தத்தால் நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பிற்கு வடமாகாண சுகாதார அமைச்சும் வடமாகாண சபை நிர்வாகமுமே முழுமையான பொறுப்பு என்பதனையும் அறியத்தருவதாக மேலும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-250)




# இரணைமடுக்குளத்தின் கீழான நெற்செய்கை அறுவடை ஆரம்பம்



(பரந்தன்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த சிறுபோக நெற்செய்கை வெற்றிகரமாக நிறைவு பெற்று அறுவடைகள் இடம்பெற்று வருவதாக இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனச் செயலாளர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு காலபோகத்தின் விதை நெல்லிற்காக 900 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இரணைமடுக்குளம் முழுமையாக வற்றி நீர்ப்பாசன நெருக்கடி ஏற்பட்ட போது பயிர்ச்செய்கை பாதிப்புக்குள்ளாகலாம் என்ற நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களமும் விவசாயிகளும் இணைந்து இரணைமடுக்குளத்தின் வாய்க்கால்களை ஆழப்படுத்தி இறுதிக்கட்ட நீரப்பாசன முயற்சிகளை மேற்கொண்டமை மற்றும் மழைவீழ்ச்சி இடம் பெற்றமை சிறுபோக நெற்செய்கையை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு காரணமாக அமைந்து விட்டது என அவர் மேலும் தெரிவித்தார். இன்னும் நான்கு அல்லது ஐந்து நாட்களில் அறுவடை நடைபெற்று முடிந்து விடும் எனவும் தெரிவித்தார். (2-312)

# யுத்த காலத்தில் அமையப்பெற்ற மண் அணைகள் அகற்றப்படவில்லை

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட தச்சடம்பன் பகுதியில் பயிர்ச்செய்கை நிலங்களில் 1998ஆம் ஆண்டு யுத்த காலத்தில் போடப்பட்ட இராணுவ மண் அணைகள் இன்றுவரையும் அகற்றப்படாமையினால் பயிர்ச்செய்கை காலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக இப்பகுதி விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

தச்சடம்பன் வயல் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் உள்ள பயிர்ச்செய்கை நிலங்களை ஊடறுத்து யுத்த காலத்தில் போடப்பட்ட இராணுவ மண் அணைகள் இதுவரை அகற்றப்படாமல் காணப்படுகின்றது.

இவ்வாறு மண் அணைகள் பயிர்ச்செய்கை நிலங்களை ஊடறுத்துக் காணப்படுவதனால் பயிர்ச்செய்கை காலங்களில் விவசாயிகள் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது பயிர்ச்செய்கைக்குரிய விவசாய உரங்கள் மற்றும் உள்ளீடுகளைக் கொண்டு செல்லுதல் நீர்ப்பாசன நடவடிக்கைகள் என்பவற்றில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இவ்வாறு காணப்படும் மண் அணைகள் மீள்குடியேற்றத்தின் பின்னர் கடந்த ஏழு ஆண்டுகளாக அகற்றப்படாமல் காணப்படுகின்றன.

இவற்றை அகற்றி பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யுமாறு இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (2)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை அதிகரிப்பு


கிளிநொச்சி அக்கராயன் சுபாஸ் குடியிருப்பு, கொங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனை தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் சுபாஸ் குடியிருப்பு, கொங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு விற்பனை உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதுடன் பல்வேறு குற்றச்செயல்களும் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

ஆரம்பத்தில் இப்பகுதியில் இருந்த கசிப்பு உற்பத்தி விற்பனை கடந்த காலங்களில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டபோதும் மீளவும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரித்துள்ளது

இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2)

# வவுனிக்குளத்தின் நீர்மட்டம் குறைவு; நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் பாதிப்பு



(பரந்தன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற கடும் வரட்சி காரணமாக வவுனிக்குளத்தின் நீர்மட்டம் மிக வேகமாக குறைவடைந்துள்ளதால் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்ட சுமார் 80 வரையான நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழ் காலபோகத்தின் போது ஆறாயிரம் ஏக்கருக்கும் மேலான நெற்செய்கையும் சிறுபோகத்தில் மூவாயிரம் ஏக்கர் நெற்செய்கையும் மேற்கொள்ளப்படுவதுடன் இக்குளத்தினை அண்டிய பகுதிகளில் வாழும் சுமார் 80 வரையான குடும்பங்கள் நேரடியாக நன்னீர் மீன்பிடியை தமது வாழ்வாதாரத் தொழிலாகக் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் தற்போது நிலவும் கடுமையான வரட்சி காரணமாக குளத்தின் நீர் மட்டம் மிக வேகமாக குறைவடைந்துள்ளதுடன் இவ்வாண்டு காலபோகத்தின் போது விவசாயிகள் பெரும் துன்பங்களை அனுபவித்திருந்ததுடன் சிறுபோக செய்கையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது குளத்தின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதால் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வந்த சுமார் 80 வரையான நன்னீர் மீன்பிடிப்பாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (2)

# பாடசாலையின் தேவைகளை நிறைவுசெய்ய எவரும் முன்வரவில்லை-பெற்றோர் ஆதங்கம்



கிளிநொச்சி சிவபாத கலையகத்தின் பௌதீக மற்றும் ஆளணி தேவைகளை இதுவரை நிறைவு செய்ய எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுவதாக மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பாடசாலையில் தரம் 01 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்பு மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். குறித்த வகுப்புக்களில் 431 வரையான மாணவர்கள் 12 வகுப்பறைகளில் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் போதிய வகுப்பறைகள் இன்மையால் குறிப்பிட்ட சில வகுப்புக்கள் தற்காலிக கொட்டகைகளிலும் மரநிழல்களிலும் இயங்கி வருகின்றன.

இவ்வாறு காணப்படும் இப்பாடசாலையின் தேவைகளை நிறைவுசெய்து தருமாறு மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் தாய் தந்தையரை இழந்த ஒன்பது மாணவர்களும் தந்தையை மட்டும் இழந்த 31 வரையான மாணவர்களும் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தன்று போராட்ட இடங்களுக்கு வருகைதந்து ஆதரவளியுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உருக்கமான வேண்டுகோள்

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது. அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்று ஜனாதிபதி உடனடியாக பதில் கூற வேண்டுமெனவும் அதுவரை தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்று தெரிவித்து வடக்கு.கிழக்கெங்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 173 ஆவது நாளாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக தொடர்ந்தது. அதேபோன்று கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 189 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது

இவ்வாறே வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 185 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது. அதேவேளை மருதங்கேணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 166 ஆவது நாளாகவும் தொடர்ந்து வருகிறது.

அவ்வாறே திருகோணமலை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 179 ஆவது நாளாகவும் தொடர்ந்து வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைந்த. இராணுவத்திடம் கையளித்து கைதுசெய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க நாளை மறுதினம் 30 ஆம் திகதி சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் புலம்பெயர் தேசங்களின் நிதியுதவிகளை பெற்று தமது நிறுவனங்களினதும் அமைப்புகளினதும் இருப்பை தக்கவைத்து சுய இலாபம் அடையவும் மக்கள் மாதக்கணக்கில் போராட்டங்களை நடத்தும் போது பங்களிப்பு செய்யாது இப்போது தமது இருப்புக்களை தக்கவைக்க பல்வேறு இடங்களின் போராட்டங்களை செய்து மக்களை குழப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனைவிட அரசியல்வாதிகள் தாங்கள் ஒருபுறமாக போராட்டங்களை நடத்தப்போவதாக அறிவிக்கின்றனர்.எனவே தங்களது இருப்புக்களை தக்கவைப்பதை தவிர்த்து போராட்டத்திலீடுபடும் மக்களோடு இணைந்து அனைவரும் போராட முன்வருமாறும் தமது அரசியல் இலாபங்களுக்காகவும் அமைப்புக்கள்,நிறுவனங்களின் சுய இலாபங்களுக்குமாக செயற்பட வேண்டாமெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

பல்வேறு தரப்பினர் வெவ்வேறு இடங்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களை அழைப்பதனால் அவர்கள் குழப்ப நிலையில் உள்ளார்கள். எனவே தனித்தனியாக அரசியலுக்காகவோ அல்லது அமைப்புக்கள், நிறுவனங்களின் சுய இலாபங்களுக்காகவோ செயற்படாது மாதக் கணக்கில் போராடிவரும் மக்களின் போராட்டத்தோடு இணைந்து அனைவரையும் போராட வருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் உருக்கமான வேண்டுகோள் விடுக்கின்றனர்.

எமக்காக குரல் கொடுக்க விரும்புபவர்கள் எங்களுடைய போராட்ட இடங்களுக்கு வருகைதந்து எமக்கு ஆதரவு வழங்குமாறும் புலம்பெயர் தேசத்து உறவுகள் எமக்காக உங்களது நாடுகளின் பாரிய போராட்டங்களை அன்றைய நாளில் நடத்துமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.(2-281)




## கிளிநொச்சியில் வாள்வெட்டு குடும்பஸ்தர் படுகாயம்

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். குறித்த பகுதியில் அமைந்துள்ள பேருந்து தரிப்பிடத்தில் நின்றவர் மீது, உழவு இயந்திரத்தில் வருகைதந்த ஒருவர் வாளால் வெட்டி தப்பி சென்றுள்ளார்.

சம்பவத்தில் 53 வயது மதிக்கத்தக்க காந்திகிராமம் பகுதியை சேர்ந்த கிருபாகரன் என்ற 4 பிள்ளைகளின் தந்தை வாள்வெட்டுக்கு இலக்கானவர் ஆவார். படுகாயமடைந்த நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (2-312)

## மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மூன்று இலட்சம் ரூபாய் நிதியை வழங்கி உதவியுள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக வறுமைக் கோட்டுக்குட்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் 10 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு 30 மாணவர்களுக்கு இவ் உதவி வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக சேவையின் ஒரு கட்டமாக இவ் உதவித் திட்டம் வழங்கப்பட்டது. இச் சங்கத்தின் 19 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஒவ்வொரு மாணவர்களினதும் பெயரில் வங்கிக் கணக்குகள் ஆரம்பிக் கப்பட்டு அதில் 10 ஆயிரம் ரூபாய் வீதம் வைப்புச் செயயப்பட்டது.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் இவ் வங்கிக் கணக்குப் புத்தகங்களை வடமாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், சங்க உறுப்பினர்கள் வழங்கி வைத்தனர். (2-250)

## டெங்கு ஒழிப்பும் சிரமதானப்பணியும்



(கிளிநொச்சி)

டெங்கு நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் அம்பாள்குளம் சக்தி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையொன்று நேற்று முன்தினம் அம்பாள்குளம் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இக்கிராமத்தின் கிராம அலுவலரின் உதவியுடன் சகல அமைப்புக்களையும் ஒன்றிணைத்து சிரமதானப் பணி நடைபெற்றது.

இதில் அம்பாள்குளம் கிராம அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்பு, அம்பாள்குளம் கிளி/ விவேகானந்த வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், அம்பாள் முன்பள்ளி ஆசிரியர் , நிர்வாகத்தினர், ஶ்ரீமுருகன் ஆலய நிர்வாகத்தினர், ஶ்ரீ மனோன்மணி அம்மன் ஆலய நிர்வாகத்தினர், தூயவன் கல்வி நிலையத்தினர், இளந்தென்றல் விளையாட்டுக்கழகத்தினர் மற்றும் மாதர் சங்கத்தினர் , கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் . இக்கிராமத்தை சேர்ந்த பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகியோருடன் இக்கிராம மக்கள் அனைவரும் இணைந்து இச்சிரமதானப்பணியை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது. வீதி வீதியாக ஒலிபெருக்கி மூலம் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கழமை இரவு தங்களின் வீடுகளில் உள்ள கழிவுப் பொருட்களை பைகளில் கட்டி வீதியோரத்தில் வைக்குமாறும் இதனை மறுநாள் சனிக்கிழமை கரைச்சி பிரதேச சபையின் கழிவு அகற்றும் வாகனம் மூலம் கழிவுப்பொருட்கள் எடுத்து செல்லப்படும் என அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

பின்னர் நேற்று முன்தினம் சனிக்கிழமை கிராம அலுவலர் மீனலோஜினியின் ஒருங்கிணைப்பில் சகல அமைப்பினரும் இச் சிரமதான பணியில் பங்கேற்றனர். (2-271)

## மோட்டார் சைக்கிள் விபத்து; மூவர் வைத்தியசாலையில்



வவுனியா தாண்டிக்குளத்தில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. இவ்விபத்து பற்றி தெரியவருவதாவது.

வவுனியா தாண்டிக்குளத்தில் இருந்து பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் முன்னே சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இவ்விபத்தின் போது மோட்டார் வாகனத்தில் பயணித்த ம.மதுசன் (வயது-23), நா.லோகேஸ்வரன் (வயது- 23) ஆகிய இருவரும் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இதேவேளை வவுனியா ஓமந்தையில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-250)

## வீட்டுத்திட்டத்தில் அமையப்பெற்ற வீடுகள் ஆபத்தான நிலையில்

### மக்கள் வெளியேற்றம்

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உயிலங்குளம் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட 50 வீட்டுத்திட்டத்தில் தற்போது 20 வரையான குடும்பங்களே வாழ்ந்து வருகின்றன. அதாவது துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் சொந்தக் காணிகள் இன்றி வாழ்ந்த மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு கடந்த 2012 ஆம் ஆண்டு மேற்படி இந்திய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட 50 வீட்டுத்திட்டத்தின் மாதிரிக்கிராமத்தில் 50 வரையான குடும்பங்கள் குடியேற்றப்பட்டன்.

குறித்த குடியிருப்பில் போதிய அடிப்படை வசதிகள் இன்மை, குடிநீர் வசதிகள் இன்மை மாற்றுத்திறனாளிகள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான தொழில் வாய்ப்பின்மை காட்டு யானைகளின் தொல்லை போன்ற காரணங்களால் குறித்த மாதிரி வீட்டுத்திட்டத்திலிருந்த ஐம்பது வரையான குடும்பங்களில் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கிருந்து வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்துள்ளன.

அத்துடன் தலா பத்து இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் யாவும் உரிய முறையில் அமைக்கப்படாமல் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் ஆபத்தான நிலையில் காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு குறித்த வீடுகள் காணப்படுவதனால் தாங்கள் வீடுகளில் அச்சத்துடன் வாழும் நிலை காணப்படுகின்றது. உரிய முறையில் வீடுகளை அமைக்காத காரணத்தினால் நான்கு வருடங்களுக்குள் குறித்த வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் குறிப்பிட்ட குடும்பங்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தருமாறும் வீடுகளை புனரமைத்துத்தருமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2)

## விவசாய அமைச்சர்- மக்கள் சந்திப்பு



வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் மக்கள் சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு இடதுகரை பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

முத்தையன்கட்டு விவசாயிகள். கால்நடை வளர்ப்போர்கள் மற்றும் சமூக அமைப்பினர்கள் இணைந்து மக்கள் சந்திப்பினை ஒழுங்கு செய்திருந்தனர்.

இதில் மக்களின் விவசாய பிரச்சினை, நன்னீர் மீன்பிடி பிரச்சினை மற்றும் கால்நடை வளர்ப்போர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டது.

அத்தோடு அமைச்சராக பதவி ஏற்றுக்கொண்ட கஇசிவநேசனுக்கு மக்கள் வரவேற்பளித்தனர். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளை பழி தீர்த்ததா இந்தியா?

விடுதலைப் புலிகளை தோற்கடிக்க வேண்டும் என்ற அவசியம் இந்தியாவுக்கு இருந்ததாக பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு வார நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகளே படுகொலை செய்ததாக கூறுகின்றீர்கள். இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு ஆதரவளித்ததாகவும் கூறுகின்றீர்கள், அந்த காலப்பகுதியில் ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியின் கட்டுப்பாட்டுக்குள்ளே பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சியில் இருந்தது.

அவ்வாறாயின் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது கோபத்தினை இலங்கை இராணுவத்தை பயன்படுத்தி இந்தியா பழி தீர்த்துக் கொண்டதா?" என கோத்தபாய ராஜபக்ஷவிடம் அந்த ஊடகம் கேள்வி எழுப்பியிருந்தது.

இதற்கு பதிலளித்து பேசிய அவர், "எமது படையினர் பழி தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படவில்லை. அவ்வாறு கூறவும் முடியாது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து ஜனாதிபதியாக பதவியேற்ற இரண்டு வாரங்களில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியில் நானும் இடம்பெற்றிருந்தேன்.

இந்த விஜயத்தின் போது எம்.கே.நாராயணனுடன் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. சுமார் ஒன்றரை மணி நேரம் அவருடன் கலந்துரையாடியிருந்தேன்.

இதன்போது கடந்த 30 ஆண்டுகளில் இலங்கையை ஆட்சி செய்தவர்கள் படை நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முயற்சித்த போதிலும் அவை முடியாமல் போனது.

அதே படையினர் தற்போதும் இருக்கின்ற நிலையில் படை நடவடிக்கைகள் மூலமான முயற்சி நிச்சயம் வெற்றியளிக்காது. அத்துடன் பேச்சுவார்த்தை மூலமும் இந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

ஆகவே ஏதாவது புதிய முறையொன்றை கண்டறியும்படி எம்.கே.நாராயணன் கூறியிருந்தார். அத்துடன், விடுதலைப் புலிகளை தோற்கடிக்க வேண்டும் என்ற அவசியமும் இந்தியாவுக்கு இருந்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இருப்பதால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் கலாசாரம் சீரழிக்கப்படுகின்றது. அமைதியற்ற சூழல் தொடர்கின்றது.

ஆகவே, தமிழ் மக்களுக்கு சற்றும் ஒவ்வாத அமைப்பாகவே விடுதலைப் புலிகளை இந்தியா கருதியதாக கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)





இளவாலை சேந்தாங்குளம் புனித அந்தோனியார் ஆலய 50 ஆவது ஆண்டு நிறைவு விழா பங்குத் தந்தை பி.பிறைன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (படங்கள்: இளவாலை செய்தியாளர்)

## திருகோணமலையில் சித்திரவதைக்கூடம்
### ஒப்புக்கொண்டார் கோத்தா

திருகோணமலையில் நிலக்கீழ் பதுங்கு குழிகள் இருப்பது உண்மை என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலையிலுள்ள சித்திரவதைக் கூடத்தைப் பிரித்தானியர்களே உருவாக்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இரண்டாம் உலக யுத்தத்தின் போது பிரித்தானியர்களால் அது பயன்படுத்தப்பட்டதாகவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

எனினும் ஆயுதங்களை களஞ்சியப்படுத்துவதற்காக அதனைப் பயன்படுத்தியதாக தெரிவித்த கோத்தபாய வேறு எதற்காகவும் அதனைப் பயன்படுத்தவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சில்லில் சிக்குண்டது புடவை; குடும்பப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் செல்லும் போது திடீரென புடவை சில்லில் சிக்குண்டதில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கணவருடன் மோட்டார்சைக்கிளில் வேலணை நோக்கிச் சென்று கொண்டிருந்த குறித்த பெண் அராலி சந்தியில் புடவைத் தாவணி மோட்டார் சைக்கிள் சில்லில் சிக்குண்டதில் தலையில் படுகாயமடைந்தார். கொக்குவிலைச் சேர்ந்த பிரான்சிஸ் நாகரெட்ணம் (வயது-60) என்ற குடும்பப் பெண்ணே தலையில் பலத்த காயமடைந்த நிலையில் உடனடியாக ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-30)

## தமிழ், முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்வதன் மூலமே பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியும்
### கிழக்கு அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர் வலியுறுத்து

இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்வதன் மூலம்தான் எமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளைக் காண முடியும். அதற்கு நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும். நாங்கள் பிரிந்து நின்று எதையும் சாதிக்க முடியாது என கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத் துறை, சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு மற்றும் சமூக சேவைகள், கிராமிய மின் சார அமைச்சர் ஏ.எல்.எம். நசீர் தெரிவித்தார். கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை, சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு மற்றும் சமூக சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் கீழ் உள்ள சமூக சேவைத் திணைக்களத்தின் தொழில் பயிற்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் பெரிய நீலாவணையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பின்னிப்பிணைந்து வாழுகின்ற பிரதேசம் மருதமுனை. பெரியநீலாவணை பிரதேசமாகும் இந்தப் பிதேசத்திலே இந்தப் பயிற்சி நிலையத்தை அமைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆகவே இரண்டு சமூகங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நாங்கள் ஒற்றுமையைக் கையாளுகின்ற போதுதான் எந்த ஒரு தீர்வும், எந்த ஒரு எண்ணமும் எதிர்காலத்திலே கிடைக்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எனது அமைச்சின் கீழ் உள்ள சமூக சேவைத்திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.சி. அன்சார் நல்ல ஆளுமையும், ஆற்றலும் உள்ளவர். எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் பணிக்கின்ற எந்த விடயமாக இருந்தாலும் அதை அமைதியாகச் செவிமடுத்து கண்ணியமாக மதித்து செய்கின்ற ஆளுமை உள்ளவர்தான் அன்சார். வசதி இல்லாத மக்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான உதவிகளைச்செய்வதற்கு எப்போதும் எனது பணிப்புரை உங்களுக்கு இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வெற்றியாளர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினால் வருடாந்தம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 2017 இல் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம் பரிசு- இலக்கம் 38274

இரண்டாம் பரிசு - இலக்கம் 21718

மூன்றாம் பரிசு- இலக்கம் -27722

ஆறுதல் பரிசுகள்

1. 18058, 2. 00689, 3. 45767, 4.15137, 5.16405

இவ் இலக்கங்களுக்குரிய பரிசில்களை இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் காரியாலய நாட்களில் இல. 28, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் என அச்சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையுடன் ஆளும் ஐ.தே.க.அமைச்சர்களை விடாது துரத்தும் கூட்டு எதிரணி

(கொழும்பு)

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மேலும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர கூட்டு எதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அமைச்சர்களின் அமைச்சுக்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் இந்த அமைச்சர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனை ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு அமைச்சர்களுக்கு எதிராகவே கொண்டு வரப்படவுள்ளதாகவும் இந்த அமைச்சர்கள் தொடர்பில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு பிரிவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளின் போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் ஒப்படைக்கப்படும் என கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரியை கடுமையாகத் தாக்கிய இராணுவ அதிகாரிகள்

(கொழும்பு)

அவிசாவளையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது இராணுவ அதிகாரிகள் 5 பேர் தாக்குதல் மேற் கொண்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் அதிகாரி அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

தியதலாவை இராணுவ முகாமில் கடமையிலுள்ள கப்டன் மற்றும் 4 இராணுவ வீரர்களே இவ்வாறு தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கொழும்பில் இருந்து தியதலாவை வரை லொறி ஒன்றில் பயணித்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், 5 இலட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# மைத்திரியுடன் இரகசியப்பேச்சு நடத்தவில்லை என்கிறார் மகிந்த

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்புடன் எவ்வித பேச்சுகளையும்நடத்தவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தேர்தல் தொடர்பில் இரகசியமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக வெளியான தகவல்கள் பற்றி கூட்டு எதிர்க்கட்சியினர் அண்மையில், மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பியிருந்தனர். மைத்திரி தரப்புடன் தேர்தலில் போட்டியிட்ட அனுபவம் உண்டு என்பதனால் மீளவும் அவர்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் கிடையாது எனவும், மைத்திரியின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் திட்டமில்லை எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சிவப்பு எச்சரிக்கைப் பட்டியலிலிருந்து 150 இலங்கையர்களின் பெயர் நீக்கம்

## 50 புலிகள் உள்ளடக்கம்

இன்டர்போல் சிவப்பு எச்சரிக்கைப் பட்டியலிலிருந்து 150 இலங்கையர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்றுக்கு செய்தி வெளியிட்டுள்ளது. 50 தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் உள்ளிட்ட 150 பேரின் பெயர்கள் இன்டர்போலின் சிவப்பு எச்சரிக்கைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தப் பட்டியலிலிருந்து குறித்த பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் குற்றவாளிகளே இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெடியவன், கார்த்திகேயன் மாணிக்கவாசகர், விநாயகம், பொன்னையா ஆனந்தராஜன், ஐயன் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் 50 பேரின் பெயர்கள் இன்டர்போலால் தேடப்பட்டு வருவோரின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இவர்களை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கைக்குண்டுகளை வைத்திருந்த முனியாண்டி தர்மசீலன் மற்றும் ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள எமில்காந்தன் ஆகியோரின் பெயர்கள் மட்டுமே இந்த பட்டியலில் தற்பொழுதும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட குற்றவாளிகளின் பெயர்களை அந்த பட்டியலிலிருந்து நீக்கிய முதல் சந்தர்ப்பம் இதுவென குறித்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-3-7)

# பள்ளிவாசல் மீது கல்வீசி தாக்குதல்



(கொழும்பு)

குருநாகல் பொல்கஹவெல - நாரம்மல பகுதியிலுள்ள பள்ளிவாசல் மீது இனந்தெரியாத நபர்கள் கல் வீச்சு நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் நேற்று அதிகாலை நடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-7)

# ரயில் தடம்புரள்வு



தெமடகொட ரயில் நிலையத்தின் அருகாமையில் ரயில் ஒன்று நேற்று நண்பகல் தடம் புரண்டுள்ளது.

இதன் காரணமாக, ரயில் சேவைகளுக்கு பாதிப்புக்கள் இல்லை என ரயில்வே கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், சீர்செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

அநுராதபுரம், குடா பலாடிகுளம் பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் பலியானார்.

குறித்த நபர் பணி புரிந்த இடத்தில் இயந்திரமொன்றில் ஏற்பட்ட மின்சார கசிவு காரணமாகவே அவர் தாக்குண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பலாடிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது மதிக்கத்தக்க நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இயந்திரத்திற்கு மின்சாரத்தை கொண்டு செல்லும் இணைப்பில் ஏற்பட்ட பழுது காரணமாக மின்சார கசிவு ஏற்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (இ-3-7)

## தென்கொரியாவிலிருந்து

# இலங்கையர்கள் வெளியேறுவதற்கான பொது மன்னிப்புக் காலம் நிறைவு

(கொழும்பு)

தென்கொரியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள இலங்கையர்கள் வெளியேறுவதற்கான பொது மன்னிப்புக்காலம் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிமனை தெரிவித்துள்ளது.

கடந்த ஜுலை மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் பொது மன்னிப்புக்காலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த காலப்பகுதிக்குள் தென்கொரியாவில் சட்டவிரோதமான முறையில் தங்கியுள்ள இலங்கையர்கள் நாடு திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த காலப்பகுதியில் நாடு திரும்பும் பணியாளர்கள் தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-7)

# விஜயதாஸவை கூட்டு எதிரணியில் இணைத்துக் கொள்வதற்குத் திட்டம்



முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை கூட்டு எதிரணியில் இணைத்துக்கொள்வது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக கூட்டு எதிரணியின் செயற்பாட்டாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷ என்பவர் இலங்கையின் அரசியலில் மிக அவசியமான ஒரு நபராகவுள்ளார். எனவே அவரின் தேவையை நாம் அறிந்து கொண்டுள்ளோம் அது தொடர்பில் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி அவரின் இணக்கத்துடன் கட்சியில் இணைத்துக்கொள்ள முயற்சிக்கின்றோம்.

மேலும் இது குறித்து கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலருடனும் பேசிய பின்னர் அவர்களுடைய தீர்மானத்தையும் அறிந்துகொண்டு முன்னாள் நீதியமைச்சருடன் பேசுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவிக்கையில், முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை கட்சிக்கு அழைப்பது கட்சியின் கொள்கைகளுக்கு முரணான செயற்பாடாக அமையும்.

எனவே கட்சியின் கொள்கைகளுக்கு முரணாக செயற்படும் நோக்கத்தில் தாம் இல்லை எனத் தெரிவித்துள்ளார். (இ-3-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 38சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/7693 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 12இல்<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்: BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/7004 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 4<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/7694 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 47சூரி செவ் 2இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/7008 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் :O/L/ கடை<br>தொ.இ: B/7695 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 12 செவ் 1இல்<br>உயரம்: 151cm<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/7011 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: செவ் 12இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L/பான்சிகடை<br>தொ.இ: B/7696 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 54 செவ் 8இல்<br>உயரம்: 157cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி கனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7020 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் உள்நாட்டு யுத்தம்




(யாங்கூன்)

மியன்மார் நாட்டில் ரோஹிங்யா போராளிகளும், பாதுகாப்பு படையினரும் கடுமையாக மோதிக் கொண்டனர். இந்த மோதல்களில் மொத்தம் 71 பேர் பலியாகினர்.

மியன்மார் நாட்டில் ராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து, ஜனநாயக ஆட்சி மலர்ந்திருக்கிறது.

அங்குள்ள ராகினே மாகாணத்தில் பௌத்தர்களுடன், பங்களாதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட ரோஹிங்யா முஸ்லிம்களும் பெருவாரியாக வாழ்கின்றனர். கிட்டத்தட்ட 11 இலட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் அங்கு வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் நீண்ட காலமாக பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாவதாக சொல்லப்படுகிறது. அவர்கள் மீது மியன்மார் பாதுகாப்பு படைகளும், சில பௌத்த மத குழுக்களும் கூட தாக்குதல் நடத்துவதாக குற்றச்சாட்டு எழுந்தது.

ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக ரோஹிங்யா போராளிகள் 'தி அராக்கன் ரோஹிங்யா சால்வேசன் ஆர்மி' என்ற பெயரில் ஒரு போராளி குழு இயங்கி வருகிறது.

இந்தப் போராளிகள் குழுவினர் கலவரங்களை தூண்டுவதாகவும் கிராம தலைவர்கள், அரசு உளவாளிகள் ஆகியோரை கொல்வதாகவும், தகவல் தொடர்பு அமைப்புகளுக்கு இடையூறுகள் செய்வதாகவும் அரசு குற்றம் சாட்டுகிறது.

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் ரோஹிங்யா முஸ்லிம் போராளிகளுக்கும் பாதுகாப்பு படைகளுக்கும் இடையேயான மோதல்கள் அதிகரித்தன. இராணுவ நடவடிக்கைக்கு பயந்து ஏறத்தாழ 87 ஆயிரம் ரோஹிங்யா முஸ்லிம்கள் தங்களது தாயகமான பங்களா தேசத்துக்கு சென்றுவிட்டனர். ஆனால் மனித சமூகத்தினருக்கு எதிரான குற்றங்களில் மியன்மார் ராணுவம் ஈடுபடுவதாக ஐ.நா. சபை குற்றம் சாட்டியது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் ஒரு மலைப்பகுதியில் இருந்து ரோஹிங்யா முஸ்லிம்களை இராணுவம் அப்புறப்படுத்த முயற்சித்தபோது அங்கு மோதல்கள் மீண்டும் சூடுபிடிக்கத்தொடங்கின. மாகாணம் முழுவதும் பதற்றமான சூழல் உருவானது.

இந்த நிலையில் ராகினே மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 1 மணி முதல் 24 பொலிஸ் சாவடிகளை குறிவைத்து ரோஹிங்யா போராளிகள் ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்தினர்.

அவர்களை எதிர்த்து பொலிஸாரும் எதிர்த்தாக்குதல் நடத்தினர். ஒரு இராணுவ தளத்தினுள் ஊடுருவவும் ரோஹிங்யா போராளிகள் முயற்சித்தனர்.

இந்த மோதல்களில் மொத்தம் 71 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 12 பேர் பாதுகாப்பு படையினர். மற்றவர்கள் போராளிகளும், பொதுமக்களும் ஆவர்.(8)

# அமெரிக்காவில் ஹார்வே புயல்





(நியூயோர்க்)

மணிக்கு 210 கிலோ மீற்றர் வேகத்தில் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தை தாக்கிய ஹார்வே புயலால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 14 ஆண்டுகால வரலாறு காணாத பெரும் புயல் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கியது. மணிக்கு சுமார் 140 கிலோ மீற்றர் வேகத்தில் சீறிவந்த இந்த பெரும் புயல் உள்ளூர் நேரப்படி நேற்றிரவு 11 மணியளவில் அரன்சாஸ் மற்றும் ஓகோன்னோர் துறைமுகங்களுக்கு இடையே டெக்சாஸ் மாநிலத்தின் தென்பகுதியை பதம் பார்த்தது.

அதிகாலை 2 மணியளவில் சீற்றம் தணிந்து மணிக்கு 125 மைல் வேகத்தில் வலுவிழந்த ஹார்வே புயல் டெக்சாஸ் மாநிலத்தின் பல பகுதிகளை துவம்சம் செய்தது.

கடந்த 2004ஆம் ஆண்டு அமெரிக்காவை தாக்கிய சார்லி புயலுக்கு பிறகு நேற்று வீசிய இந்தப் புயல் தொடர்பாக ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்ததால் மக்கள் அனைவரும் வீடுகளுக்குள்ளே முடங்கி கிடந்தனர்.

பலத்த மழைக்கு இடையில் கோரத்தாண்டவம் ஆடிய ஹார்வே புயலின் எதிரொலியாக பல மரங்கள் வேரோடு சாய்ந்தன. வீதிகளில் உள்ள மின்சார விளக்கு கம்பங்கள் மற்றும் விளம்பர பலகைகள் சில கட்டடங்களின்மீது விழுந்து கிடப்பதை காண முடிந்தது.

மாநிலத்தின் பல பகுதிகளில் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டதால் 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

வீதிகளில் விழுந்திருக்கும் மரங்களை அகற்றும் பணியில் பேரிடர் மீட்புப் படை யினர் ஈடுபட்டு வருகின்றனர். பல முக்கிய வீதிகளின் குறுக்கே மரங்கள் விழுந்து கிடப்பதால் வாகன போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதனால் அலுவலகங் களுக்கு செல்ல முடியாமல் பலர் தவித்து வருகின்றனர்.

அதிகாலை 4 மணியளவில் டெக்சாஸ் மாநிலத்தை புயல் கடந்த பின்னரும் மாநிலத்தின் பல பகுதிகளில் நாளை மறுதினம் புதன் கிழமை வரை கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. (8)

# ஈராக்கில் உச்சக்கட்டப் போர்



(பக்தாத்)

ஈராக் நாட்டில் ஐ.எஸ் தீவிரவாதிகளின் பிடியில் இருக்கும் டெல் அஃபார் நகரின் மையப்பகுதியை உச்சக்கட்ட போர் நடத்தி அரசுப் படைகள் நெருங்கிவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தினர் உலகம் முழுவதும் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இவர்களை ஒடுக்கும் பணியில் அமெரிக்கா தலைமையில் கூட்டுப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈராக் நாட்டில் மொசூல் உள்ளிட்ட முக்கிய நகர்களை ஈராக் அரசுப்படையினர் மீட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள டெல் அஃபார் வாதிகளின் பிடியில் இருந்து மீட்பதற்காக உச்சக்கட்ட போர் நடந்து வருகின்றது. இந்நிலையில், டெல் அஃபார் நகரில் ஐ.எஸ்.அமைப்பினர் வைத்திருந்த தடுப்புகளை தகர்த்து நகரின் மையப்பகுதி வரை அரசுப்படை வீரர்கள் முன்னேறியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்நகரில் சுமார் 2000 முதல் 4000 தீவிரவாதிகள் இருக்கலாம் எனவும், 50 ஆயிரம் பொதுமக்கள் நகரில் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து சில நாட்களில் நகர் முழுவதையும் அரசுப்படையினர் மீட்டு விடுவார்கள் என்று ராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (8)

# அமெரிக்க கூட்டுப்படை தாக்குதல்

## சோமாலியாவில் 10 பேர் பலி!



(மொகாதிஷு)

சோமாலியாவில் அமெரிக்க கூட்டுப்படையினர் நடத்திய தாக்குதலில் மூன்று குழந்தைகள் உட்பட பத்து பேர் பலியாகியுள்ளனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் ஆட்சி நடைபெற்று வருகிறது.

இந்த ஆட்சியை எதிர்த்து அல் கொய்தா அமைப்பின் ஆதரவு பெற்ற அல் ஷபாப் தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கு கென்யா, ஜிபோட்டி, உகண்டா, எதியோப்பியா ஆகிய நாடுகளை சேர்ந்த ஆபிரிக்க யூனியன் கூட்டுப் படையினர், பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கூட்டுப்படையினருக்கு அமெரிக்க அரசு ஆதரவளித்து வருகிறது. கூட்டுப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், சோமாலிய தலைநகர் மொகாடிஷு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் அல் ஷபாப் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை, அப்பகுதியில் கூட்டுப்படையினர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் அல்ஷபாப் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டதாக கூட்டுப் படையினர் முதலில் அறிவித்தனர். அதன் பின்னர், இத்தாக்குதலில் சில சோமாலிய பொதுமக்களும் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த தாக்குதலில் கொல்லப்பட்ட யாரும் தீவிரவாதிகள் இல்லை, அனைவரும் சாதாரண பொதுமக்கள் தான் என இந்த சம்பவத்தை கண்ணால் பார்த்த ஒருவரும், அப்பகுதியைச் சேர்ந்த அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

மேலும் பலியான பத்து பேரில் மூன்று பேர் குழந்தைகள் எனவும், அந்த மூவருக்கும் எட்டு முதல் பத்து வயதுக்குள் இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. (8)




# மீண்டும் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதாக தென்கொரிய இராணுவம் தகவல்

(சியோல்)

அமெரிக்காவுடன் தொடர் மோதல் போக்கை கடைப்பிடித்து வரும் வடகொரியா நேற்று முன் தினம் காலை புதிய ஏவுகணை சோதனை நடத்தியதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஐ.நா மற்றும் சர்வதேச நாடுகளின் கண்டனங்களை பொருட்படுத்தாமல் வடகொரியா தொடர்ந்து ஏவுகணைகளை பரிசோதித்து வருகிறது.

இதனால், அமெரிக் காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே போர் மூளும் சூழல் உருவானது. தற்போது, போர்ப்பதற்றம் சற்றே தணிந்துள்ள நிலையில் வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.

வடகொரியாவின் காங்வான் மாகாணத்தில் இருந்து நேற்று முன்தினம் செலுத்தப்பட்ட ஏவுகணை 250 கிலோ மீற்றர் தூரம் வரை பறந்து கடலில் விழுந்துள்ளதாக தென்கொரிய இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நிலைமையை உற்று கவனித்து வருவதாக தெரிவித்துள்ள தென் கொரிய இராணுவ அதிகாரிகள் இந்த ஏவுகணை குவாம் தீவை குறிவைத்து ஏவப்பட்டதாக சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது

## பிரதமர் மோடி உரை



(டில்லி)

வன்முறையை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது. சட்டத்தை யாரும் கையில் எடுத்துக் கொள்ள அனுமதிக்க முடியாது என பிரதமர் நரேந்திர மோடி மன் கி பாத் வானொலி உரையில் தெரிவித்துள்ளார்.

மாதம்தோறும் மன் கி பாத் என்ற நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். அந்தவகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வானொலியில் பேசிய பிரதமர் மோடி, "வன்முறையை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது. சட்டத்தை யாரும் கையில் எடுத்துக் கொள்ள அனுமதிக்க முடியாது.

சட்டத்தின் முன் அனைவரும் தலைவணங்கியே தீர வேண்டும். எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் சட்டத்தில் தீர்வு இருக்கிறது.

நாடே பண்டிகைகளைக் கொண்டாடும் மனநிலையில் இருக்கும்போது ஏதாவது ஒரு மூலையில் மட்டும் இத்தகைய வன்முறை நடப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இது புத்தரும், மகாத்மா காந்தியும் வாழ்ந்த மண். இங்கேதான் ஒற்றுமைக்காக உயிரை நீத்த சர்தார் வல்லபாய் படேல் வாழ்ந்தார்.

ஆண்டாண்டு காலமாக அஹிம்சையே இம்மண்ணின் அடித்தளமாக இருந்திருக்கிறது.

சுதந்திர தினத்தன்று நான் ஆற்றிய உரையின்போது சொன்னதையே இங்கே வலியுறுத்துகிறேன். நம்பிக்கை என்ற பெயரில் நிகழ்த்தப்படும் வன்முறையை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது.

சட்டத்தை யாரும் கையில் எடுத்துக் கொள்ள அனுமதிக்க முடியாது. அந்த வன்முறை தனிநபர் மீதான நம்பிக்கையாலோ அரசியல் கட்சி மீதான நம்பிக்கையாலோ மதம் அல்லது கலாசாரம் மீதான நம்பிக்கையாலோ நிகழ்த்தப்படுவதை அனுமதிக்க முடியாது. சட்டத்தின் முன் எல்லோரும் தலை குனிய வேண்டும். சட்டம் தன் கடமையைச் செய்யும். குற்றவாளிகளுக்கு தண்டனை நிச்சயம்" எனத் தெரிவித்தார்.

தன்னைத் தானே சாமியார் என்று அறிவித்துக் கொண்ட குர்மீத் ராம் ரஹீம் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பஞ்சாப் - ஹரியானா மாநிலங்களில் கட்டவிழ்க்கப்பட வன்முறைச் சம்பவங்களை முன்வைத்து பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். (8)

# முதல்வர் பழனிச்சாமியின் செயலாளர் பதவி பறிப்பு

## தினகரன் நடவடிக்கை





சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்து முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி நீக்கம் செய்து அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஜெயலலிதா மறைந்தது முதல் அ.தி.முக. கட்சிக்குள் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து நிலவி வருகிறது. 6 மாத இழுபறிக்கு பின்னர் பன்னீர் செல்வம் மற்றும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான இரு அணிகள் ஒன்றாக இணைந்தால் சிக்கல்கள் முடிவுக்கு'வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.


ஆனால், தினகரன் தலைமையிலான அணி தனியாக விஸ்வரூபம் எடுத்தது. ஈ.பி.எஸ். மற்றும் தினகரன் அணிகளுக்கு இடையே சண்டை நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. அ.தி.மு.க. நிர்வாகிகள் பலரின் கட்சி பதவிகளை பறித்து புதிய நிர்வாகிகளை தினகரன் நியமித்து வருகிறார்.

இந்நிலையில், சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்து முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை டி.டி.வி. தினகரன் நீக்கி நடவடிக்கை எடுத்துள்ளார். சேலம் மாவட்ட முன்னாள் எம்.எல்.ஏ.எஸ்.கே.செல்வம் அந்த பொறுப்பிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சேலம் மாநகர் மாவட்ட செயலாளர் பொறுப்பில் இருந்து ஜி.வெங்கடாஜலம் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக எஸ்.இ.வெங்கடாஜலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், பொதுச் செயலாளர் சசிகலாவின் ஒப்புதலுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்படுவதாக தினகரன் தெரிவித்துள்ளார். (8)

# தினகரன் அணிக்கு மேலும் 8 எம்.எல்.ஏக்கள் வருகிறார்கள் – கதிர்காமு,ஏழுமலை தகவல்



தினகரன்அணிக்கு மேலும் 8 எம்.எல்.ஏக்கள் வருகிறார்கள் என்று புதுவையில் தங்கியுள்ள பூந்தமல்லி எம்.எல்.ஏ. ஏழுமலை, பெரியகுளம் எம்.எல்.ஏ. கதிர்காமு தெரிவித்தனர். தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் புதுவை சன்வே ஹோட்டலில் தங்கியுள்ளனர்.

ஏற்கனவே 18 எம்.எல்.ஏக்கள் தங்கி இருந்த நிலையில் நேற்று முன்தினம் புதிதாக அறந்தாங்கி எம்.எல்.ஏ. ரத்தினசபாபதி, விருத்தாசலம் எம்.எல்.ஏ. கலைச்செல்வன் ஆகியோர் தினகரன் அணிக்கு தாவி புதுவை ஹோட்டலுக்கு வந்தனர்.

இதனால் எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை 20 ஆனது. ஏற்கனவே வெற்றிவேல் எம்.எல்.ஏ. தினகரன் ஆதரவாளராக இருக்கிறார். இவரையும் சேர்த்து தினகரன் அணிக்கு 21 எம்.எல்.ஏக்கள் உள்ளனர்.

புதுவை ஹோட்டலில் தங்கியுள்ள பூந்தமல்லி எம்.எல்.ஏ. ஏழுமலை, பெரியகுளம் எம். எல்.ஏ. கதிர்காமு ஆகியோர் நேற்றுக் காலை ஹோட்டல்வளாகத்தில்நடைப் பயிற்சி செய்தனர். அப்போது அவர்கள் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது.

தற்போது கட்சி எங்களிடம் இருக்கிறது. ஆட்சி அவர்களிடம் இருக்கிறது. கட்சியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று தொண்ட ர்கள் விரும்புகிறார்கள். அதற்காகத்தான் நாங்கள் இங்கு வந்து தங்கி இருக்கி றோம்.

எங்கள் தொகுதி மக்கள் எங்களுக்கு முழு ஆதரவு தருகிறார்கள். கட்சியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக எத்தனை நாட்கள்வேண்டுமானாலும் நீங்கள் அங்கேயே தங்கி இருங்கள் என்று எங்களிடம் கூறுகிறார்கள். நல்லாட்சிநடக்கவேண்டும்என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

எனவே, இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வு ஏற்படும் வரை நாங்கள் இங்கு தான் இருப்போம். நாங்கள் இங்கு சந்தோஷமாக இருக்கிறோம். எங்களுக்கு எந்த மனக்குறைவும் இல்லை.

தினகரனுக்கு ஆதரவாக இப்போது ஏராளமான எம்.எல்.ஏக்கள் உள்ளனர். அதாவது இன்னும் பல மடங்கு ஆதரவு எங்கள் அணிக்கு வரப் போகிறது. 8 எம்.எல்.ஏக்கள் எங்கள் அணிக்கு வருகிறார்கள். அவர்களும் புதுவை வருவார்கள். இதை தொடர்ந்து அடுத்தடுத்து எம்.எல். ஏக்கள் எங்கள் அணியில் சேருவார்கள் என்று தெரிவித்தனர். (8)




# முடிந்தால் என்னை நீக்கட்டும்

## தினகரனுக்கு அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் சவால்



முடிந்தால் என்னை மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து தினகரன் நீக்கட்டும் என்று அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் சவால் விடுத்துள்ளார்.

திருச்சி மாவட்டம் முசிறி எம்.எல்.ஏ. செல்வராஜ் இல்ல திருமண விழா நேற்று முசிறியில் நடந்தது. இதில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட சுற்றுலாத்துறை அமைச்சர் வெல்லமண்டி நடராஜன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவால் அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட தினகரன் மூத்த நிர்வாகிகளை கட்சியில் இருந்து நீக்கி வருகி றார். முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை சேலம் மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து நீக்க தினகரனுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

ஜெயலலிதாவின் ஆன்மா இதனை நிச்சயம் மன்னிக்காது. அவர் கீழ்ப்பாக்கம் செல்ல வேண்டிய நேரம்வந்துவிட்டது.

நம்பிக்கையில்லா தீர்மானம் மட்டுமல்ல, எதை யும் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி சந்திப்பார், சமாளிப் பார், வெற்றியும் பெறுவார். ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் சசிகலாவின் படத்தை மறைத்து வாக்குக் கேட்டது ஏன்? ஆட்சி, அதிகாரம் அனைத்திலும் செல்வாக்கை இழந்த தினகரன் தற்போது அ.தி.மு. க. நிர்வாகிகளை நீக்கம் செய்வது சரியில்லை. முடிந்தால் என்னை மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து நீக்கட்டும் என்று அவர் தெரிவித்தார். (8)

# கட்சிப்பதவியிலிருந்து பழனிச்சாமியை நீக்கியது நகைச்சுவை; இல.கணேசன்

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை கட்சி பதவியில் இருந்து தினகரன் நீக்கியது நகைச்சுவையாக இருக்கிறது என்று இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

தாம்பரம் அடுத்து பீர்க்கங்கரையில் பா.ஜனதா மாவட்ட பொதுச்செயலாளர் பொற்றாமரை சங்கரன் ஏற்பாட்டில் நடந்த விநாயகர் சிலை சிறப்பு பூஜை விழாவில் பா.ஜனதா மூத்த தலைவரும், எம்.பியுமான இல.கணேசன் கலந்து கொண்டார்.

அப்போது அவர் நிருபர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை கட்சி பதவியில் இருந்து தினகரன் நீக்கியது நகைச்சுவையாக இருக்கிறது. தெரு குழந்தைகள் விளையாட்டு போல் உள்ளது.

அ.தி.மு.கவுக்கு மக்கள் 5 ஆண்டு ஆட்சி செய்ய வாக்களித்துள்ளனர். ஒரு ஆண்டு நிறைவடைந்துள்ளது. இன்னும் 4 ஆண்டு இருக்கிறது.

ஒற்றுமையாக செயற்பட்டு 5 ஆண்டு ஆட்சியை தக்க வைக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஓ.பி.எஸ். இணைந்ததை மக்கள் வரவேற்கிறார்கள்.

தினகரன் அணி என கருதப்படுபவர்களால் வரும் பிரச்சினைகளை திறம்பட சந்திப்பார்கள் என்று கருதுகிறேன். தி.மு.க. எம்.எல்.ஏக்கள் ஆளுநரிடம் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரக் கோரி மனு கொடுத்துள்ளனர். அது பற்றி ஆளுநர் சொன்ன பிறகுதான் தெரிய வரும்.

அதிர்ஷ்டவசமாக தமிழகத்துக்கு திறமையான ஆளுநர் கிடைத்துள்ளார். அவர் நல்ல முடிவு எடுப்பார் நல்லதே நடக்கும் என்றார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரிப்பு

## இந்திய இராணுவம் குற்றச்சாட்டு

பிராந்தியப் பாதுகாப்புச் சூழலில் சீனா தனது தலையீட்டை தொடர்ந்தும் வலுப்படுத்தி வருவதாக இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பாக, இந்தியாவின் அயல் நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், மாலைதீவு, மியன்மார் போன்றவற்றுடனான பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை சீனா அதிகரித்து வருகிறது.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் வழியாக, சீனா- பாகிஸ்தான் பொருளாதார பாதை அமைக்கப்படுவது, இந்தியாவின் இறைமைக்கு சவாலாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.



சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# அமெ.உயர்மட்ட அதிகாரி கொழும்புக்கு வருகிறார்

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியாவுக்கான பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் இந்தவாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு கொழும்பில் எதிர்வரும் 31ஆம் திகதி தொடக்கம், செப்டெம்பர் முதலாம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

அலரி மாளிகையில் நடக்கவுள்ள இந்த இரண்டு நாள் மாநாட்டில், உலகின் பல்வேறு நாடுகளின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் அமெரிக்காவின் சார்பில், தெற்கு மத்திய ஆசியாவுக்கான பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் பங்கேற்கவுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி அலிஸ் வெல்ஸ், கொழும்பில் நடக்கும் இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் முக்கிய உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, அவர், இலங்கை அரசின் அதிகாரிகள், வணிகத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து, பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஒத்துழைப்பு தொடர்பாக கலந்துரையாடவுள்ளார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)



# ஜனாதிபதியின் நேரடிக்கட்டுப்பாட்டில் சட்டமா அதிபர் திணைக்களம்

சட்டமா அதிபர் திணைக்களத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவுள்ளார் என்று, கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நேற்று முன்தினம் பரபரப்பாகப் பேசப்பட்டதாக, ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நீதி அமைச்சின் கீழேயே இதுவரை காலமும் சட்டமா அதிபர் திணைக்களம் இருந்து வருகிறது.

விஜயதாஸ ராஜபக்ஷ நீதியமைச்சராக இருந்த போது, சட்டமா அதிபர் திணைக்களம் சரியாகச் செயற்படவில்லை என்று அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐ.தே.கவினர் கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே, சட்டமா அதிபர் திணைக்களத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நேரடிக்கட்டுப்பாட்டில்கொண்டு வரலாம் என்று நம்பப்படுகிறது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை ஜனாதிபதி நிராகரித்திருந்தார்.

நீதி அமைச்சராக தலதா அத்துகோரள நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவரின் அமைச்சின் கீழ் உள்ள



திணைக்களங்கள், துறைகள் பற்றிய வர்த்தமானி அறிவிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை.

அந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும் போது, சட்டமாஅதிபர் திணைக்களத்தை ஜனாதிபதி தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டு வரக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

எனினும், அரசதரப்பு இதனை இன்னமும் உறுதிப்படுத்தவில்லை. (இ-7)

# கொழும்பில் இன்று தொடங்குகிறது இராணுவத்தின் பாதுகாப்பு கருத்தரங்கு

இலங்கை இராணுவம் ஆண்டுதோறும் நடத்தும் கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு இன்று ஆரம்பமாகவுள்ளது. கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இன்று தொடங்கவுள்ள இந்தக் கருத்தரங்கு இரண்டு நாட்கள் நடைபெறும்.

'வன்முறை தீவிரவாதத்தை எதிர்கொள்ளல் - உலகளாவிய போக்குகள்' என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டுக்கான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இதில் வெளிநாட்டைச் சேர்ந்த 12 மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த 15 புலமையாளர்கள் உரையாற்றவுள்ளனர் என்பதுடன், 200 வெளி நாட்டுப் பிரதிநிதிகள் உள்ளிட்ட 800 பேர் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கையிலுள்ள 10 நாடுகளில் வெளிநாட்டு ஆலோசகர்களும், இந்தியாவில் இருந்து வரும் 22 நாடுகளில் பாதுகாப்பு ஆலோசகர்களும், 42 வெளிநாட்டு இராணுவ பிரதிநிதிகள் குழுக்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். [illegible] நாடுகளின் அனைத்து இராணுவத் தலைமை அதிகாரிகளும் இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்கவுள்ளனர்.

இலங்கையில் இந்திய அமைதிப்படையில் பணியாற்றிய, இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற மூத்த அதிகாரியான மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா முக்கிய உரையாற்றவுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### நின்று நான்கு வார்த்தைகள்!

பத்துப் பதினைந்து வருடங்கள் கழித்து சந்தித்துக் கொள்ளும் சிலர்கூட மிகச் சாதாரணமாக 'விஷ்' செய்துவிட்டு நொடியில் பிரிந்துவிடும் வேகமான உலகம் இது.

ஒரு நிமிடம் நின்று நான்கு வார்த்தைகள் பேசிவிட்டுப் போகக்கூடாதா?

என் அனுபவத்திலும் நான் பார்க்கிறேன். நாம் நான்கு வார்த்தை பேச நினைத்தாலும் நிறுத்தாமல் வண்டியை செலுத்திக்கொண்டு போய்விடுகிறார்கள் பலர். அல்லது வேகமாக நடக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

எவ்வளவு செய்கைத்தனம்! எவ்வளவு இயந்திர மயம்.

சில பேர் படு போலியாக, "என்ன சௌக்கியம்" என்று கேட்டபடி நகர்ந்து கொண்டே இருப்பார்கள்.

ஒரு கணம்கூட நிற்கமாட்டார்கள். இன்னும் சிலர் ரயிலைப் பிடிக்கிறவர்கள் மாதிரிப் பரபரப்பார்கள்.

இத்தனைக்கும் இவர்கள் அப்படி ஒன்றும் அவசரத்தில் இல்லை; எல்லாம் நடிப்பு.

இவர்கள் நிமிடங்கள் மிச்சம் செய்வதாக எண்ணிக் கொண்டு பல அருமையான மனிதர்களையும் ஒப்பற்ற வாய்ப்புகளையும் இழந்து விடுகிறார்கள்.

எவ்வளவு அவசரத்தில் இருந்தாலும் சரி, ஒரு நிமிடம் நின்று நான்கு வார்த்தை பேசிவிட்டு, நம் அவசரத்தை இதமாக உணர்த்திவிட்டுப் பிரிந்துவிடலாம்.

'எவ்வளவு அவசரத்திலும் நின்று எப்படிப் பேசிவிட்டுப் போகிறார் பார்' என்று எதிராளியின் மனம் நினைக்குமானால் அது நமக்கு நன்மையில் முடியும்.

பார்த்தால் பிடித்துக் கொள்வார்கள் என்கிற மனிதர்களிடம் அவசரமில்லாவிட்டாலும்கூட அவசரத்தைத் திணித்துக்கொண்டு பேசலாம். தவறில்லை. ஆனால் நிற்காமல் நழுவ எண்ணக்கூடாது.

இதையெல்லாம் செய்யாமல் நகர்ந்து கொண்டே இருந்தால் இவர் ஏன் நம்மைத் தவிர்க்கிறார் என்று சிந்திக்கத் தொடங்குவார். அவர்கள் ரொம்பவும் வளர்ந்துவிட்டார்கள். அதனால் நம்மை இப்போதெல்லாம் மதிப்பதே இல்லை என்றோ, 'நம் கை ரொம்பவும் இறங்கிப் போய்விட்டது. அதனால் நம்மை இவர்கள் சட்டை செய்வதே இல்லை' என்றோ அவரவர்கள் தத்தம் சூழ்நிலைகளுக்கும் மனநிலைகளுக்கும் தக்கவாறு காரணங்களைக் கற்பனையாகக் கற்பித்துக்கொள்ள ஆரம்பித்துவிடுகிறார்கள்.

பல ஆண்டுகள் கஷ்டப்பட்டுக் கட்டிய நட்புக் கோட்டை இந்த ஒரு நிமிட கஞ்சத்தனத்தால் இடிந்து சரிந்து விடுகிறது.

இதனால் நாள்பட நாள்பட, நம்முடைய உலகம் சுருங்க ஆரம்பிக்கிறது.

இதன் விளைவாக என்னவாகும் தெரியுமா?

எங்கே போனாலும் ஏமாற்றங்கள், யாரைப் பார்த்தாலும் முகம் மாறிச் சொல்லப்படும் பதில்கள்; மரியாதைக் குறைவுகள்; அவமானங்கள்.

எப்போது பார்த்தாலும் நம்மைப் பாம்பு துரத்துகிற மாதிரியான பரபரப்பை இனிமேலாவது குறைத்துக் கொள்வோமா?

**லேனா தமிழ்வாணன்**

# தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசிடம் ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து



நல்லாட்சி அரசு கடந்த காலத்தில் ஏற்படுத்திய தாமதங்கள் அல்லது இழுத்தடிப்புக்கள் என்பவற்றை, மேலும் செய்யாமல் விரைவாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடிவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் தீர்வைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தென்னிலங்கை அடிப்படைவாதிகள் குழப்புகின்றார்கள் என்பதை வைத்துக் கொண்டு இழுத்தடிக்கின்ற போக்கைச் செய்யக் கூடாது என கூறியுள்ளார்.

இன்று பேரினவாத சக்திகள், அடிப்படைவாதிகள், சிறுபான்மை மக்களை மோத விட்டு குளிர்காய்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஒன்றிணைந்த நிறுவனங்களின் தொழிற்சங்கம் எச்சரிக்கை!

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் வரி அறவிடும் தீர்மானத்தை அரசாங்கம் உடனடியாக கைவிடவேண்டும். இல்லையெனின் அதற்கு எதிராக அடுத்த மாத முற்பகுதியில் நிதியமைச்சை முற்றுகையிட்டு போராட்டத்தை முன்னெடுப்போம் என ஒன்றிணைந்த நிறுவனங்களின் தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மருதானை சனசமூக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அச்சங்கத்தின் இணைப்பாளர் வசந்த சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மோ.சைக்கிள் மோதி குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியைக் கடக்க முற்பட்ட போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஊரெழு அம்மன் கோவில் முன்பாக குறித்த நபர் வீதியைக் கடக்க முற்பட்ட போது யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஊரெழு மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த இராசலிங்கம் (வயது-56) என்ற நபர் படுகாயமடைந்ததோடு மோட்டார் சைக்கிளிலில் வந்த பாஸ்கரன் சிவதர்ஷன் (வயது -24) என்ற இளைஞனும் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-30)

## சீனப் பெண்ணொருவர் கொழும்பில் கைதானார்

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பெண்ணொருவரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் விசா அனுமதியின்றி தங்கியிருந்த சீனப் பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சீனப் பெண் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8)

## பதவி விலக்கப்பட்ட பொலிஸ் படை அதிகாரி துப்பாக்கியுடன் கைது

(கொழும்பு)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் வெலிப்பென்ன தல்கஸ்கொட சந்தியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி-56 ரக துப்பாக்கி, துப்பாக்கியின் மெகசீன், கத்தி, இராணுவ பொலிஸ் சீருடை, 9மில்லிமீற்றர் ரவைகள் ஆகியன சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் இராணுவப் பொலிஸ் படையில் பணியாற்றிவந்ததாகவும் தானியங்கி ஆயுதத்தை தம் வசம் வைத்திருந்தமைக்காக அவர் பதவி விலக்கப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட நபர் 42 வயதான ஒருவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## துவாயுடன் வங்கிக்குச் சென்ற இளைஞனால் பெரும் பரபரப்பு



(கொழும்பு)

திருகோணமலையில் இளைஞர் ஒருவரின் நடவடிக்கை வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

துவாய் ஒன்றை மாத்திரம் அணிந்த நிலையில் இந்த இளைஞர் வங்கிக்கு சென்றுள்ளார்.

திருகோணமலை தனியார் வங்கி ஒன்றிற்கே இந்த இளைஞர் இவ்வாறு சென்றுள்ளார்.

அங்கிருந்த அனைவரும் இந்த சம்பவத்தை விநோதமாக பார்வையிட்டதுடன், புகைப்படங்களை எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர். (இ-7)


அமரர் அ.அமிர்தலிங்கத்தின்

90 ஆவது பிறந்ததின நினைவு

தோற்றம் 1927 - 08 - 26

மறைவு 1989 - 07 - 13



அமரர்.

அ.அமிர்தலிங்கம்

(தமிழர் தலைவர், இலங்கைப் பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் 1977-1983)

தமிழ் இனத்தின் தளபதியாக, தலைவனாக 40 ஆண்டுகள் அயராது உழைத்து மறைந்த அமரர் அண்ணனின் 90ஆவது பிறந்த தினத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மொழிவழி மாநிலத்தில், தமிழ்த் தாயகத்தில் இறைமை, சுயநிர்ணய உரிமை, இணைப்பாட்சி (சமஷ்டி) அடிப்படையிலான சுயாட்சித் தமிழ் அரசை நிறுவுவோம் என உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.

"தமிழர்களின் தாகம் தமிழ் ஈழத் தாயகம்"

எம்.கே.சிவாஜிலிங்கம்,
தேசிய அமைப்பாளர்,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ),
வடக்கு மாகாண சபை உறுப்பினர்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர்.

077 772 9020

(240)



Yarl Beauty & Language's Skills College

YBLSC

மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!

30% OFF + சாறி பிளவ்ஸ் பயிற்சி இலவசம்

அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

SPECIAL OFFER

சனி, ஞாயிறு பிரிவுகள் 03.09.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 04.09.2017 அன்று 10.00 மணிக்கு

பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள் ஒழுங்கை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் நளினியும் உண்ணாவிரதம்



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வரும் கணவர் முருகனை சந்திக்கவுள்ள தடையை திரும்ப பெறக் கோரி நாளை 29 ஆம் திகதி முதல் நளினி வேலூர் சிறையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளதாக அவரது சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

ஜீவசமாதி அடைவதற்காக முருகன் கடந்த 18 ஆம் திகதி முதல் சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். உண்ணாவிரதத்தை கைவிட வேண்டும் என்று சிறைத்துறை அதிகாரிகள் கோரியும் அவர் தொடர்ந்தும் உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார். இது சிறை விதிகளை மீறும் செயலாகும். இதனால் 19ஆம் திகதி முதல் அடுத்த 3 மாதங்களுக்கு அவரை, மனைவி உள்ளிட்ட உறவினர்கள் யாரும் சந்திக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முருகனின் உடல் நிலை குறித்து அறிய அவரது சட்டத்தரணி புகழேந்தி சிறைக்கு சென்றார். அப்போது நளினியையும் சந்தித்து பேசினார். இது குறித்து புகழேந்தி கூறுகையில், கணவரை சந்திக்க விதிக்கப்பட்ட தடையை திரும்ப பெறக்கோரி நாளை முதல் நளினியும் உண்ணாவிரத போராட்டத்தை தொடங்க உள்ளார் என்றார். (8)

# ஸ்டாலினும் டி.டி.வி தினகரனும் கூட்டணி ஆட்சி அமைப்பார்கள்

## சுப்ரமணியன் சுவாமி கணிப்பு



எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினும், டி.டி.வி தினகரனும் இணைந்து தமிழகத்தில் சில நாட்களில் கூட்டணி ஆட்சி அமைப்பார்கள் என பா.ஜ.க மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இரண்டு அணிகளாக உடைந்த அ.தி.மு.க. சமீபத்தில் ஒன்றாக இணைந்தது. எடப்பாடி பழனிச்சாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் இணைந்து அக்கட்சியின் பொதுச் செயலாளராக உள்ள சசிகலா குடும்பத்தினரை கட்சியை விட்டு நீக்க திட்டமிட்டு வருகின்றனர். இதனால், அதிருப்தியில் உள்ள டி.டி.வி தினகரன் தனது பக்கம் எம்.எல்.ஏக்களை இழுத்து அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

22 எம்.எல்.ஏ.க்கள் டி.டி.வி தினகரன் பக்கம் இருக்கும் நிலையில், தமிழக சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க முதல்வருக்கு உத்தரவிட வேண்டும் என ஆளுநருக்கு தி.மு.க. தரப்பிலிருந்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு, பரபரப்பாக இருக்கும் அரசியல் சூழ்நிலையை மேலும் பரபரபாக்கும் வகையில் பா.ஜ.க மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமி தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து பதிவிட்டுள்ளார். (8)

# முதல்வரை நீக்கியதற்கு எதிர்ப்பு

## சேலத்தில் தினகரன் உருவப்பொம்மை எரிப்பு

(சேலம்)

முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை கட்சி பொறுப்பில் இருந்து நீக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து தினகரன் உருவ பொம்மையை எரித்து சேலத்தின் பல்வேறு பகுதிகளில் அதிமுகவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் பதவியில் இருந்து முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை நீக்கி அ.தி.மு.க. அம்மா அணி துணை பொதுச் செயலாளர் தினகரன் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்



இந்த நடவடிக்கையை கண்டித்து சேலம் 5 ரோடு மற்றும் அயோத்தியாப் பட்டணம் பகுதிகளில் அ.தி.மு.க. சார்பில் டி.டி.வி.தினகரன் உருவ பொம்மை எரிக்கப்பட்டது.

முதல் வர் பழனிச்சாமியை நீக்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து தினகரனுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

நிர்வாகிகள் நீக்கப்பட்டதை கண்டித்து, டிடிவி தினகரனின் உருவப் பொம்மையை எரித்து அ.தி.மு.கவினர் கடந்த சில தினங்களாகவே தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (8)

# ஊட்டச்சத்து குறைபாட்டால் 52 குழந்தைகள் உயிரிழப்பு

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள ஜாம்ஷெட்பூர் அரச வைத்தியசாலையில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 52 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைவால் உயிரிழந்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜாம்ஷெட்பூர் நகரில் உள்ள மகாத்மா காந்தி நினைவு அரச வைத்தியசாலையில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 52 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

குழந்தைகளின் உயிரிழப்புக்கு ஊட்டச்சத்து குறைபாடு முக்கிய காரணம் என்று வைத்தியசாலை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜாம்ஷெட்பூர் அரச மருத்துவமனையில் மருந்துகள் பற்றாக்குறையால் நோயாளிகள் கடுமையாக பாதிக்கப்படுவதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

120 கோடிக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் குழந்தைகள் உயிரிழக்கும் சம்பம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முன்னதாக, மேற்குவங்க மாநிலத்தில் உள்ள மால்டா வைத்தியசாலையில் 10இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்த சம்பவம் பெரியளவில் பேசப்பட்டது. (8)

# பீகார் வெள்ளப் பாதிப்பு

## பலி எண்ணிக்கை 440 ஆக உயர்வு



பீகார் மாநிலத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 440 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பீகார் மாநிலத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 440 ஆக அதிகரித்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பீகார் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள ஆறுகளில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து வருகின்றனர்.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 440 ஆக அதிகரித்துள்ளது. பீகாரின் 19 மாவட்டங்களில் 1.71 கோடி பேர் பாதிப்பு அடைந்துள்ளனர். 262 நிவாரண முகாம்களில் 1.65 இலட்சம் பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பேரிடர் மேலாண்மை குழுவினர் மற்றும் 16 மாநில பேரிடர் மேலாண்மை குழுவினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பீகாரில் வெள்ளத்தால் பாதிப்பு அடைந்த மாவட்டங்களை பிரதமர் மோடி, முதலமைச்சர் நிதிஷ்குமார் ஆகியோர் உலங்குவானூர்தியில் சென்று பார்வையிட்டனர். அப்போது, பீகார் மாநிலத்துக்கு நிவாரணத் தொகையாக ரூ.500 கோடி வழங்க பிரதமர் மோடி உத்தரவிட்டார். (8)

# பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பதில்



பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் உதவி வேண்டும் என்றால் பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்கு வந்த பின்னர் பயங்கரவாத விவகாரத்தில் பாகிஸ்தான் மீதான பிடியை இறுக செய்தது. ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்கள் பாகிஸ்தானுக்கு மேலும் நெருக்கடியை கொடுத்து வருகிறது. பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிப்பதாக பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டி அமெரிக்கா அந்நாட்டிற்கு வழங்கும் உதவியை நிறுத்தி வைத்து உள்ளது.

பாகிஸ்தானுக்கு அடுக்கடுக்காக நெருக்கடி கொடுக்கும் வகையில் அமெரிக்க அதிகாரிகளின் எச்சரிக்கையானது இருந்து வருகிறது.

டொனால்ட் ட்ரம்ப் பயங்கரவாதிகளுக்கு இனியும் புகலிடம் தந்து கொண்டிருந்தால், அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்று பாகிஸ்தானுக்கு நேரடியாக எச்சரிக்கை விடுத்தார். பயங்கரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தானுக்குள் அமெரிக்கா வான்வழி தாக்குதலை தொடங்கும் எனவும் மிரட்டல் விடுக்கப்பட்டு உள்ளது.

பாகிஸ்தான் ராணுவ தளபதி கமார் ஜாவேத் பாஜ்வா, பாகிஸ்தான் அமெரிக்காவிடம் இருந்து பொருள் மற்றும் நிதி உதவியை நாடவில்லை அமெரிக்கா நம்பிக்கையுடனும், மரியாதையுடன் எங்களை நடத்த வேண்டும் என அமெரிக்க தூதரிடம் வலியுறுத்தினார். இருப்பினும் அமெரிக்காவில் இருந்து பாகிஸ்தானுக்கு எதிரான செய்தியானது தொடர்ந்த வண்ணமே உள்ளது.

முன்னாள் பிரதமர் நவாஸ் செரீப்பின் சகோதரரும், பஞ்சாப் மாகாண முதலமைச்சருமான ஷாபாஸ் செரீப் அமெரிக்க உதவிகளுக்கு பாகிஸ்தான் விடை கொடுக்கும் நேரம் வந்துவிட்டது என கூறிஉள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் உதவி வேண்டும் என்றால் பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்காவின் உதவி வேண்டும் என்றால் அந்நாடு ஹக்கானி நெட்வோர்க், தலிபான் போன்ற பயங்கரவாத இயக்கங்களுக்கு எதிராக நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

"பாகிஸ்தான் உளவுத்துறைக்கும், பயங்கரவாத இயக்கங்களுக்கும் இடையே நீண்ட காலை தொடர்பு உள்ளது. இந்தநிலையானது ஒரே நாளில் மாறிவிடும் என நாங்கள் நினைக்கவில்லை, காலப்போக்கில் மாற்றங்களை எதிர்பார்க்கிறோம்," என பெயரை வெளியிட விரும்பாத டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கேய்ன் வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

கொக்கேய்ன் போதைப் பொருளை தன்வசம் வைத்திருந்த ஒருவரை கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தரமுல்லை பிரதேசத்தை சேர்ந்த 37 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 9.95 கிராம் கொக்கேய்ன் போதைப்பொருளை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# சர்வதேச ரோஸ்மாஸ்டர்ஸ் கழகத்தின் தலைவராக இலங்கையர் நியமனம்

(கொழும்பு)

சர்வதேச "ரோஸ்மாஸ்டர்ஸ்" கழகத்தின் புதிய தலைவராக இலங்கையரான பால்ராஜ் அருணாசலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடாவின் வன்கூவர் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச "ரோஸ்மாஸ்டர்ஸ்" கழகத்தின் வருடாந்த நிகழ்வின் போதே சர்வதேச "ரோஸ்மாஸ்டர்ஸ்" கழகத்தின் புதிய தலைவராக இலங்கையரான பால்ராஜ் அருணாசலம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறித்து சு.கட்சி எந்த முடிவும் எடுக்கவில்லை

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை எந்த முடிவுகளையும் எடுக்கவில்லை என அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான உடன்படிக்கை சம்பந்தமாக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருவதால், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சந்திம வீரக்கொடி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருப்பவர்கள் கட்சியின் ஒழுக்க கட்டுப்பாட்டை கொண்ட உறுப்பினர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் சுதந்திரக் கட்சி மேற்கொள்ளத் தயாரில்லை எனவும் கூறியுள்ளார்.



அதேவேளை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சம்பந்தமாக ஜனாதிபதி பொருத்தமான நடவடிக்கையை எடுப்பார் என நம்புவதாக பிரதியமைச்சர் அஜித் பீ.பெரேரா கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதது. (இ-7)

# இரட்டைக்கொலை குறித்து விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

மினுவாங்கொட, கமன்கெதர பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் மகன் ஆகியோரை கூர்மையான ஆயுதங்களினால் நேற்று முன்தினம் கொலை செய்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம்காலை 8 மணியளவில் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

48 வயதுடைய தந்தையும், 20 வயதுடைய மகனுமே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர். காயமடைந்த நிலையில் தந்தையும், மகனும் மினுவாங்கொட அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

வாய்த் தர்க்கம் முற்றியதனால் ஏற்பட்ட மோதல் நிலைமை, இவ்வுயிர் இழப்புக்கு காரணம் என தெரிய வந்துள்ளது.

கமன்கெதரவில் குடியிருக்கும் இரு குடும்பங்களுக்கிடையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும், மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலங்கள் மினுவாங்கொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரியவருகின்றது. (இ-3-7)

# அமெரிக்கவாழ் இலங்கையர்களிடம் வேண்டுகோள்

அமெரிக்காவில் வீசிய கடும் சூறாவளியில் அமெரிக்காவில் வாழும் இலங்கையர்கள் எவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின் அங்குள்ள இலங்கைக்கான தூதரகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் 110 கிலோ மீற்றருக்கும் அதிகமான வேகத்தில் காற்று வீசியுள்ளது.

இந்தநிலையில் குறித்த பகுதியில் வசிக்கும் இலங்கையர்களுக்கு ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் அங்கிருக்கும் இலங்கைத் தூதரகத்தை தொடர்புகொண்டு தேவையான உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1174

Search for people, places and things   Nagendram   Home


## பிருந்தா




## சாந்தன்




## ரது



## சிவானு




## பூர்விகா




## சானுகா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மதிக்கப்படுகின்ற இனமாக தமிழர்கள் மாறவேண்டும்

## கனேடிய பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்கள் மதிக்கப்படுகின்ற ஒரு இனமாக மாற வேண்டும் எனவும், அதற்காக அரசியல் ரீதியாக உரிமைகள் தொடர்பான சட்ட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பில் கனடா அரசாங்கம் சர்வதேச ரீதியாக குரல் கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனேடியத் தமிழர் பேரவையினரால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் தமிழர் தெருவிழா 3ஆவது முறையாக இவ்வாண்டும் மிகவும் கோலாகலமாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், கனடாவின் ஸ்காபுறோ நகரில் நேற்று நடைபெற்ற "தமிழர் தெருவிழாவில்" சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குறித்த நிகழ்வில் அந்நாட்டு தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-8)

## ரஷ்யப் பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் இலங்கை பாதுகாப்புச் செயலர் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கை பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, ரஷ்யாவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அலெக்சாண்டர் போமின் தலைமையிலான உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ரஷ்யாவில் 'இராணுவம் -2017 எக்ஸ்போ' என்ற இராணுவ தளபாடக் கண்காட்சி கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகியது.

நேற்றுடன் நிறைவடைந்த இந்தக் கண்காட்சியில் ஆரம்ப விழாவில் இலங்கை பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன தலைமையிலான குழுவின்ர் பங்கேற்றிருந்தனர்.

இந்த கண்காட்சியின் ஒரு பக்க நிகழ்வாக, ரஷ்யாவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அலெக்சாண்டர் போமின் தலைமையிலான உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அத்துடன், இராணுவ, தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான சமஷ்டி சேவைகள் அதிகாரிகளையும் இலங்கை பாதுகாப்பு செயலர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (7-8)

## இலங்கையின் செயற்பாடு குறித்து அனைத்துலக சமூகம் ஏமாற்றம்

### ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி கவலை

(ஜெனிவா)



ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 18 மாதங்கள் கழித்தும், இலங்கை அரசாங்கம் எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை என்பது அனைத்துலக சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின், இராஜதந்திர விவகாரங்களுக்கான பிரதிநிதி போல் கொட்பிறி தெரிவித்துள்ளார்.

'இலங்கை அரசாங்கம் கூடிய விரைவில் சிறப்பு நீதிமன்றம் ஒன்றையோ, நீதிப் பொறிமுறையையே அமைப்பதற்கான வாய்ப்பு எதுவும் தென்படவில்லை.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 18 மாதங்கள் கழித்தும், இலங்கை அரசாங்கம் எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை என்பது அனைத்துலக சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் காணாமல் போனோருக்கான பணியக சட்டம் நிறைவேற்றப்பட்ட போது, நான் நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால் இன்னமும் எந்த முன்னேற்றமும் இல்லை.

இதன் தொடர்ச்சியாக உண்மை ஆணைக்குழு நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது வெறும் வரைவு நிலையிலேயே இருக்கிறது." என்றும் அவர் தெரிவித்தார். (7-8)

## ராஜிதவுக்கு சு.க. ஆதரவு

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் பட்சத்தில் அமைச்சருக்கு ஆதரவாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்படும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க எந்த நிபந்தனைகளும் இன்றி சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்குவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 39 பேரின் கையொப்பத்துடன் சபாநாயகருக்கு கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொழும்பு உணவகம் ஒன்றில் தீப்பரவல்

கொழும்பு கோட்டை-செத்தம் வீதி பகுதியில் உணவகம் ஒன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்று மாலை குறித்த பகுதியில் தீப்பிடித்ததாக கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

தீயை கட்டுப்படுத்துவதற்காக தீயணைப்பு பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். (8)

## ராஜித மாத்திரமா குற்றவாளி

### ஜே.வி.பியின் தலைவர் அநுர கேள்வி

(கொழும்பு)



ராஜித மாத்திரமா குற்றவாளி என்ற கேள்வியை கேட்டால் முழு அரசாங்கத்தின் மீதும் விரல் நீட்ட வேண்டிய நிலைமை உருவாகும் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. அமைச்சர் ராஜித சேனாரட்ன தனது கடமைகளைச்சரியாக முன்னெடுக்கவில்லை. அவர் தனிப்பட்ட சில நலன்களை கருத்தில்கொண்டு செயற்படுகின்றார் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போதே அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3)

## ரயில்வே திணைக்களத்தை தனியார்மயப்படுத்த நேரிடும்

### துறைசார் அமைச்சர் நிமால் எச்சரிக்கை



ரயில்வே திணைக்களத்தின் ஊழியர்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்புகளில் ஈடுபட்டு வந்தால், ரயில்வே திணைக்களத்தை தனியார்மயப்படுத்த நேரிடும் என போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தரமான ரயில் சேவையை வழங்க சகல தொழிற்சங்கங்களும் புதிய ரயில்வே முகாமையாளருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தான் போக்குவரத்து அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், தொழிற்சங்க பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வை பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொய்யான தர்க்கங்கள் இனிமேலும் வேண்டாம்

### தேர்தலை நடத்துக– ஜே.வி.பி

தேர்தலை காலந் தாழ்த்துவதற்காக தொடர்ந்தும் போலியான தர்க்கங்களை முன்வைக்காமல் இந்த வருட இறுதிக்குள் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துமாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

2012 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்ற சட்டமூலமே கடந்த பாராளுமன்றத்தில் திருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

2012 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டமூலம் அப்போதைய துறைசார் அமைச்சர் அதாவுல்லாவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் அந்த சட்டமூலம் பசில் ராஜபக்ஷவின் அரசியல் நோக்கங்களை பிரதானமாக கொண்டே தயாரிக்கப்பட்டிருந்தது என்று அநுர குமார திஸாநாயக்க மேலும் குற்றம்சாட்டினார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் பத்து வருட அஞ்ஞாதவாசம் உறுதி



சொத்துக் குவிப்பு வழக்கில் நான்கு ஆண்டு கால சிறைத் தண்டனை விதித்து அளிக்கப்பட்ட தீர்ப்பை மறுசீராய்வு செய்யக்கோரி, சசிகலா தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்ததையடுத்து சசிகலாவின் அரசியல் எதிர்வரும் சுமார் நான்கு வருட காலத்துக்கு சிறைச்சாலைக்குள்ளேயே முடங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் சசிகலாவுக்கு விதிக்கப்பட்ட நான்கு ஆண்டு சிறைத் தண்டனை மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழக முன்னாள் முதல்வரான மறைந்த ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா மற்றும் சசிகலாவின் உறவினர்களான இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கை விசாரித்த பெங்களூர் விசாரணை நீதிமன்றம் நான்கு ஆண்டுகால சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

இதை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நால்வரும் மேல்முறையீடு செய்தனர். வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் விசாரணை நீதிமன்ற தீர்ப்பை இரத்துச் செய்து நால்வரையும் விடுதலை செய்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக அரசு மேல்முறையீடு செய்தது. இதற்கிடையே கடந்தாண்டு டிசெம்பரில் ஜெயலலிதா காலமானார். அதனால் அ.தி.மு.கவை கைப்பற்றி, தமிழக முதல்வர் ஆகலாம் என்ற கனவுடன் சசிகலா செயற்பட்டு வந்தார்.

இந்தச் சூழ்நிலையில் கடந்த பெப்ரவரி 14இல், பரபரப்பு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் அறிவித்தது. கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்து செய்து, "விசாரணை நீதிமன்ற தீர்ப்புப் படி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர், நான்கு ஆண்டு சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்" என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனால் நான்கு ஆண்டு சிறைத் தண்டனை அனுபவிப்பதுடன், அதற்கு அடுத்த ஆறு ஆண்டு வரை சசிகலா தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை உருவானது.

உச்ச நீதிமன்ற தீர்ப்புப் படி, கர்நாடக தலைநகர் பெங்களூரில் உள்ள பரப்பன அக்ரஹார சிறையில் சசிகலா, இளவரசி, சுதாகரன் அடைக்கப்பட்டனர். சிறைக்குச் செல்லும் முன்னர் அ.தி.மு.கவை நிர்வகிக்கும் பொறுப்பை தன் உறவினர் தினகரன் வசம் சசிகலா ஒப்படைத்தார்.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் முதல்வர் பதவியில் இருந்து பன்னீர்செல்வம் அகற்றப்பட்டார். பழனிச்சாமி முதல்வராக நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து நிகழ்ந்த அதிரடி அரசியல் மாற்றங்களால், பன்னீர் செல்வம் - பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. அணிகள், சமீபத்தில் இணைந்தன.

இச்சூழ்நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பை மறுசீராய்வு செய்யக்கோரி சசிகலா மற்றும் இரு உறவினர்கள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.ஏ. பாப்டே, அமிதவராய் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்த போது, சசிகலா மற்றும் உறவினர்கள் சார்பில், மூத்த சட்டத்தரணி முகுல் ரோஹத்கி ஆஜராகி வாதிட்டார்.

விசாரணை முடிவில், நீதிபதிகள் அளித்த தீர்ப்பில், சொத்துக் குவிப்பு வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் எந்தப் பிழையும் காணப்படவில்லை.

எனவே அதை மறு சீராய்வு செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. மறு சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு சசிகலாவின் நான்கு ஆண்டு சிறைத்தண்டனையை உறுதி செய்துள்ளது.

தமிழக முதல்வராக பழனிச்சாமியும், துணை முதல்வராக பன்னீர்செல்வமும் அ.தி.மு.கவில் செல்வாக்குப் பெற முயற்சித்து வரும் இந்நிலையில் தன்னைப் பலப்படுத்த வழக்கிலிருந்து விடுதலை பெறுவதே சிறந்த வழி எனக் கருதிய சசிகலா, அதற்கேற்ப காய்களை நகர்த்தி வந்தார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு சசிகலா, தினகரன் மற்றும் ஆதரவாளர்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**21 ஆண்டுக்கு முன்னும் சிறை**

கடந்த 1996 இல் சொத்துக் குவிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டபோது சசிகலா முதல்முறையாக சிறையில் அடைக்கப்பட்டார். பின் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார். 2014 இல் பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு, நான்கு ஆண்டு கால சிறைத் தண்டனை விதித்தது.

சசிகலா, இளவரசி, சுதாகரனுக்கு தலா 10 கோடி ரூபா அபராதமும் ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாய் அபாரதமும் விதித்தது. ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பை அளித்த உச்சநீதிமன்றம், அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை கைவிட்டது.

இதேவேளை சென்னையில் எதிர்வரும் செப்.15இல் அண்ணாதுரை பிறந்த நாளன்று அ.தி.மு.க பொதுக்குழு கூட்டப்பட்டு பொதுச்செயலர் பதவியில் இருந்தும் அ.தி.மு. கவில் இருந்தும் சசிகலா நீக்கப்படுகிறார். புதிய பொதுச் செயலர் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# உயிர்களைப் பறிக்கும் ரயில்கள்



ஒடிஷா மாநிலத்திலிருந்து உத்தரகாண்டில் உள்ள ஹரித்வாருக்குச் சென்று கொண்டிருந்த உத்கல் எக்ஸ்பிரஸ், கடந்த சனிக்கிழமையன்று தடம் புரண்டு 23 பேர் இறந்தனர், 200-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இந்தச் சம்பவத்துக்கு அதிகாரிகளின் அலட்சியமே காரணம் என்று முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தினந்தோறும் பல இலட்சம் பேர் பயணிக்கும் ரயில்களின் இயக்கத்தைக் கண்காணிக்க வேண்டிய அதிகாரிகளின் அலட்சிய நிர்வாகம் அதிர்ச்சி அளிக்கிறது.

உத்தர பிரதேசத்தின் முசாஃபர்நகர் மாவட்டம் கத்தௌலி ரயில் நிலையத்துக்கு அருகில் சனிக்கிழமை மாலை 5.46 மணிக்கு இந்த விபத்து நடந்திருக்கிறது. மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் ரயில் சென்றதால் 14 பெட்டிகள் தடம் புரண்டன. பராமரிப்புப் பிரிவைச் சேர்ந்த பொறியாளர்கள் அந்த இடத்தில் இரண்டு நாட்களாக வேலை செய்து வந்துள்ளனர். அதைக் குறிக்க சிவப்புக் கொடிகளோ எச்சரிக்கைகளோ வைக்கப்படவில்லை. ரயில் பாதை பராமரிப்புப் பணி நடப்பதாகத் தகவல் தெரிவிக்கவில்லை என்று கத்தௌலி ரயில் நிலையக் கண்காணிப்பாளர் ராஜீந்தர் சிங் தெரிவித்துள்ளார். பராமரிப்பு, பழுதுபார்ப்புப் பணிகள் நடந்தால் ரயில்கள் 20 கி.மீ. அல்லது 10 கி.மீ. வேகத்தில் மட்டுமே இயக்கப் படும். அதனால், ரயில்களின் பயண நேரம் கூடிவிடும், தங்களுடைய மண்டலத் துக்கு அவப்பெயராகிவிடும் என்று, பராமரிப்புப் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் ரயில் இயக்கம் தொடர்பான பிற துறைகளுக்குத் தகவல் தெரிவிப்பதில்லை. அதற்குப் பதிலாக, இரு ரயில்களின் பயண இடை வேளையில் சிறு பராமரிப்புப் பணிகளைச் செய்கின்றனர் என்று ரயில்வே ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

கத்தௌலி ரயில் நிலையம், டில்லிக்கு 100 கி.மீ. தொலைவில் இருந்தும்கூட மீட்புப்பணிகளில் தொய்வு ஏற்பட்டிருப்பது இன்னும் கொடுமையானது. விபத்தில் சிக்கியவர்களை உள்ளூர் மக்களே பெட்டிகளிலிருந்து மீட்டு உணவு, தண்ணீர் கொடுத்து உதவியுள்ளனர். ஹரித்வாருக்குச் சென்ற பல யாத்திரிகர்கள், தங்களை மீட்டவர்களில் கணிசமானவர்கள் முஸ்லிம்கள் என்று நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

கடந்த 2016-17 நிதியாண்டில் மட்டும் மொத்தம் 99 விபத்துகள் நடந்தன. அதில் ரயில் பாதை பராமரிப்பு சரியில்லாததால் ஏற்பட்ட விபத்து களின் எண்ணிக்கை 40 என்று தெரிகிறது. ரயில் பாதையைத் திறம்படப் பராமரிக்க முடியாமல் இருப்பதற்கு முதல்காரணம், தகுதியான போதிய ஊழியர்கள் இல்லாததே. ஆள்குறைப்பு, பயிற்சி பெற்றவர்களை வேலைகளில் அமர்த்தாதது ஆகியவற்றாலேயே இந்தப் போதாமை நிலவுகிறது. ரயில்வே துறை மேம்பாடு தொடர்பாக, வாய்கிழியப் பேசி வரும் மோடி அரசு, பயணிகளின் உயிர்விடயத்தில் எந்த அளவுக்கு அக்கறை காட்டுகிறது என்ற கேள்வி எழுகிறது. அரசின் அலட்சியத்துக்கு மனித உயிர்கள் பலியாவது மன்னிக்க முடியாதது.

**தஹிந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## புத்திசாலி புஜ்ஜி

அது மலையடிவாரத்தில் அமைந்துள்ள பள்ளிக்கூடம்.

அந்த ஊர் மட்டுமன்றி அருகில் உள்ள ஊர்களிலிருந்தும் பலரும் அங்கு கல்வி பயின்று வந்தனர்.


மலைமீது பல குரங்குகள் கூட்டங்கூட்டமாக வசித்து வந்தன.

அந்தக் கூட்டத்தில் புஜ்ஜி என்ற சிறிய குரங்கும் இருந்தது. அது மிகவும் புத்திசாலி. சரியாக பள்ளிக்கூட உணவு நேரத்தில் மலையை விட்டுக் கீழே இறங்கி வரும்.

மாணவர்கள் தருகின்ற உணவைச் சாப்பிட்டுவிட்டுச் செல்லும். தாகம் தீர்த்துக் கொள்ள மாணவர்கள் குடிக்கும் குடிநீர்க் குழாயில், மாணவர் களைப் போலவே குழாயைத் திறந்து குடித்து விட்டு, மீண்டும் குழாயைச் சரியாக மூடிவிட்டுச் செல்லும்.

இது அன்றாடம் நடக்கின்ற நிகழ்வு. ஞாயிற்றுக் கிழமைகளில் வழக்கம் போல புஜ்ஜி மாணவர்கள் இல்லாததைக் கண்டு ஏமாந்து போகும். வெறும் நீரை மட்டும் குடித்துவிட்டு மலையேறும்.

முதலில் குரங்குக் குட்டியைக் கண்டு மாணவர்கள் அச்சம் கொண்டனர்.



நாளடைவில் அதன்மீது அன்பு செலுத்த ஆரம் பித்துவிட்டனர்.

பின்னர், அதற்குத் தாங்கள் உண்ணும் உணவிலிருந்து ஒரு பிடி கொடுத்து மகிழ்ந்தனர்.

ஒருநாள் வழக்கம்போல, உணவு இடைவேளைக்குச் சரியாக வந்த புஜ்ஜி, உணவுக்காகக் காத்திருந்தது.

சில மாணவர்கள் மரத்தடியில் உண்டு கொண்டிருந்தனர். அவர்களின் அருகே குரங்குக் குட்டி வந்ததும் தங்களின் உணவில் கொஞ்சம் கொடுத்தனர்.

அதனை உண்டு முடித்தது. சிந்திய பருக்கைகளை, குரங்குக் குட்டியோடு அணில் பிள்ளையும் உண்டு மகிழ்ந்தது.

புஜ்ஜிக்குத் தாகம் எடுத்தது. அது குழாய் இருக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தது.

அங்கே பல மாணவர்கள் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் உள்ளே புகுந்த புஜ்ஜி திடுக்கிட்டது.

குடிநீர்க் குழாய் உடைந்து, ஆறுபோல பெருக்கெடுத்து சீறிப் பாய்ந்தது. மாணவர்கள் செய்வ தறியாது திகைத்தபடி நின்றிருந் தனர்.

புஜ்ஜி அங்கும் இங்கும் சென்று எதையோ தேடிக் கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் கையில் அகப்பட்ட துணி, கயிறு போன்ற வற்றைக் கொண்டு வந்தது.

கூட்டமாக நின்றிருந்த மாண வர்களை விலக்கிவிட்டு, குழாயி லிருந்து பாய்ந்து கொண்டிருந்த நீரை ஒரு கையால் அணைத்து மறுகையால் துணியைச் சுற்ற ஆரம் பித்தது.

பலமுறை தோல்வியே கிடைத்தது. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தது புஜ்ஜி.

இதனைக் கண்ட சில மாண வர்கள் தங்கள் தவறை உணர் ந்தனர். குட்டிக் குரங்கோடு சேர்ந்து குழாயைத் துணியால் அடைத்து, கயிற்றால் கட்டினர். தண்ணீர் வீணாவது தடுக்கப் பட்டது.

மன நிறைவோடு அங்கிருந்து புறப்பட்டது குட்டிக் குரங்கு புஜ்ஜி.

அன்பைக் கொடு, ஆபத்தில் உதவு, புத்திசாலியாய் இரு!




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1349 - கொள்ளை நோயைக் காரணம் காட்டி ஜெர்மனியின் மாயின்ஸ் நகரில் 6,000 யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1511 - போர்த்துக்கீசர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர்.
- 1521 - ஓட்டோமான் துருக்கியர் பெல்கிரேட் நகரைக் கைப்பற்றினர்.
- 1619 - ஜெர்மனியின் இரண்டாம் பேர்டினண்ட் புனித ரோமப் பேரரசன் ஆனான்.
- 1789 - வில்லியம் ஹேர்ச்செல் சனிக் கோளின் புதிய சந்திரனைக் கண்டுபிடித்தார்.
- 1844 - பிரெட்ரிக் எங்கெல்ஸ் மற்றும் கார்ல் மார்க்ஸ் இருவரும் பாரிசில் சந்தித்தனர்.
- 1845 - சயன்டிஃபிக் அமெரிக்கன் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1849 - ஒரு மாதகால முற்றுகையின் பின்னர் வெனிஸ் நகரம் ஆஸ்திரியாவிடம் வீழ்ந்தது.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைப் பிடித்தது.
- 1879 - சூளுக்களின் கடைசி மன்னன் செட்ஸ்வாயோ பிரித்தானியர்களினால் சிறைப் பிடிக்கப்பட்டான்.
- 1898 - காலெப் பிராடம் தான் கண்டுபிடித்த மென்பானத்திற்கு பெப்சி கோலா எனப் பெயரிட்டார்.
- 1913 - நெதர்லாந்தின் அரசி வில்ஹெல்மினா த ஹேக்·நகரில் அமைதி அரண்மனையைத் திறந்தார்.
- 1916 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி, ருமேனியா மீதும், இத்தாலி ஜெர்மனி மீதும் போரை அறிவித்தன.
- 1922 - ஜப்பான் சைபீரியாவில் இருந்து தனது படைகளை விலக்கச் சம்மதித்தது.
- 1924 - சோவியத் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜோர்ஜியர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.
- 1931 - பிரான்சும், சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.
- 1943 - நாசி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக டென்மார்க்கில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமானது.
- 1963 - மார்ட்டின் லூதர் கிங், 200,000 பேருடன் 'என் கனவு யாதெனில்..' என்ற புகழ்பெற்ற வார்த்தைகளுடன் சொற்பொழிவாற்றினார்.
- 1964 - பிலடெல்பியாவில் இனக்கலவரம் ஆரம்பித்தது.
- 1979 - ஐ.ஆர்.ஏயின் குண்டு ஒன்று பிரசல்சில் வெடித்தது.
- 1988 - ஜெர்மனியில் வான வேடிக்கை விழா ஒன்றின் போது மூன்று விமானங்கள் மோதி பார்வையாளர்கள் மீது வீழ்ந்ததில் 75 பேர் கொல்லப்பட்டு 346 பேர் படுகாயமடைந்தனர்.

பிறப்புகள்

- 1855 - நாராயணகுரு, இந்து ஆன்மிகவாதி (இ. 1928)
- 1863 - அய்யன்காளி, இந்திய சாதிய எதிர்ப்பு செயற்பாட்டாளர் (இ. 1914)
- 1932 -யாகிர் அஹரோனோவ், இசுரேலியக் கல்வியாளர்
- 1934 -ஏ. பி. கோமளா, தென்னிந்தியத் திரைப்படப் பின்னணிப் பாடகி
- 1957 - ஈவோ யொசிப்போவிச், குரோவாசியாவின் 3வது அரசுத்தலைவர்
- 1957 - ஐ வெய்வே, சீனச் சிற்பி, மனித உரிமைச் செயற்பாட்டாளர்
- 1959 - சுமன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 1965 - ஷானியா ட்வைன், கனடியப் பாடகி
- 1969 -ஜேக் பிளாக், அமெரிக்க நடிகர்
- 1982 - பிரசன்னா, தமிழகத் திரைப்பட நடிகர்
- 1983 - லசித் மாலிங்க, இலங்கைத் துடுப்பாளர்
- 1986 -கிலாத் ஷாலித், இசுரேலியப் போர்வீரர், ஊடகவியலாளர்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 120 | 160 | 130 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 380 | 300 | 300 |
| தக்காளி | 160 | 200 | 120 | 160 | 140 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 80 | 80 |
| கோவா | 80 | 120 | 80 | 120 | 80 | 80 | 120 |
| கரட் | 120 | 200 | 140 | 240 | 160 | 160 | 160 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 40 | 100 | 50 | 80 | 80 | 100 | 70 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 100 | 120 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 200 | 140 | 180 | 180 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120 | 130 | 130 | 120 | 130 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 200 | 120 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 70 | 50 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 100 | 120 | 120 | 100 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 | 100 | 80 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 120 | 70 | 120 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 120 | 200 | 100 | 160 | 130 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 30 | 40 | 100 | 50 | 80 | 80 |
| போஞ்சி | 80 | 200 | 100 | 200 | 60 | 200 | 60 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 80 | 120 | - | 140 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 40 | 30 | 30 | 35 |
| தேசிக்காய் | 100 | 80 | 100 | 100 | 120 | 200 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 70 | 65 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | 250 | - | - | - | - | - |
| வெங்காயப்பூ | 220 | 200 | 150 | - | - | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 50 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வெள்ளரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 40 | 50 | 100 | 50 | 60 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கு நீடித்திருக்க வேண்டுமானால் செல்வத்தைப் போலவே அதையும் சிக்கனமாகவே செலவு செய்ய வேண்டும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கௌரவமாகக் கருத்துரைக்கும் பண்பாட்டுப் பஞ்சம் காணீர்

விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையால் ஒரு சில நன்மைகள் உள்ளதாயினும் தீமைகளே அதிகம் எனலாம்.

அதிலும் குறிப்பாக விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் மக்கள் அறியப்படாத முகங்கள் கூட மக்கள் பிரதிநிதிகளாகிவிடுகின்றனர்.

இதனால் தங்களின் பிரதிநிதிகள் யார் என்பதைக்கூட மக்கள் தெரிந்து வைத்திருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.

இதுதவிர, தகுதி, தகைமை என்பவற்றுக்கு இம்மியும் இடமில்லை என்ற மிகமோசமான நிலைமையும் காணப்படுகிறது.

இவை ஒருபுறம் இருக்க, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சியின் செல்வாக்கிலேயே ஆசனங்களைப் பிடித்துக் கொள்கின்றனர்.

குறித்த அரசியல் கட்சியின் தலைமையை தாஜாபடுத்தினால் அவர்கள் அடுத்து தேர்தலிலும் ஆசனம் ஒதுக்குவர். இதனால் மக்கள் விரோதிகளும் மக்கள் பிரதிநிதிகளாகி விடுகின்றனர்.

நாங்கள் எது செய்தாலும் எப்படி நடந்தாலும் எங்களை மக்கள் எதுவும் செய்ய முடியாது. நாங்கள் போட்டியிடும் அரசியல் கட்சி முன்னையவர்களின் நேர்மையால் அவர்களின் கடின உழைப்பால் மக்கள் மத்தியில் நன்மதிப்பைக் கொண்டுள்ளது.

எனவே அந்தக் கட்சியில் நாங்கள் மட்டுமல்ல; தடி, தண்டு என எதை நிறுத்தினாலும் மக்கள் வாக்களிப்பர் என்ற நினைப்பும் வேட்பாளர்களிடம் வலுப்பெற்றுள்ளது.

தவிர, நியமனப் பதவி வழங்கும் நடைமுறையும் விகிதாசாரப் தேர்தல் முறையில் இருப்பதால், தோற்றவரும் ஆசனத்தில் அமரலாம் என்றாயிற்று.

இந்நிலைமையில், பஞ்சபாண்டவர்களின் குடும்ப கலாசாரம் போல ஒரு வருடம் இவருக்கு அடுத்த வருடம் அவருக்கு என்று பதவியைப் பகிர்ந்து கட்சியில் செல்வாக்குப் பெற்றவர்களை ஆற்றுப்படுத்தும் கைங்கரியமும் நடந்தாகிறது.

இதுவே விகிதாசாரப் பிரதிநிதித்துவம் தந்த நிலைமை என்றால், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் இன்னும் சில புதிய பரிமாணங்களைக் காட்டி நிற்கின்றனர்.

அதாவது சிலர் தாங்கள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என்பதைக் கூட வெளிக்காட்டாமல் பௌவியமாக இருந்துவிட்டுப் போகின்றனர்.

அவர்கள் போகும்போதுதான் அட, இவரும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினராக இருந்துள்ளார் என்று அறிய முடிகிறது.

பரவாயில்லை; எல்லோரும் எழுந்து கத்தி, பாடல் பாடி கலாட்டா செய்யும் போது பக்குவமானவர்கள் அமைதியாக இருப்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

எதுவாயினும் உறுப்பினர்கள் சிலர் தமது கருத்துக்களை முன்வைக்கும் போது எந்த விதமான பண்பாட்டு வரன்முறைகளையும் கடைப்பிடிக்காமல், வேலிச்சண்டை, ஊர்ச் சண்டைகளில் கதைப்பது போல தங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இந்நிலைமையானது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

மாணவர் பாராளுமன்றம் என்ற ஒரு நிகழ்வை நடத்தி அதன்மூலம் ஜனநாயகக் கருத்துக்கு மதிப்பும் கௌரவமும் வழங்கச் செய்வதற்கான வழிகாட்டல்கள் நடந்து கொண்டிருக்கையில்,

மக்கள் பிரதிநிதிகள் என்போர் சண்டித்தனக் கலாசாரத் தடிப்பில் கருத்துக்களை முன்வைத்தால் மாணவர் பாராளுமன்றத்தின் நோக்கமே அர்த்தமற்றதாகிவிடும்.

எனவே, உறுப்பினர்கள் எப்படியும் எதுவும் கதைக்கலாம் என்ற நிலைமையை அவர்கள் சார்ந்த கட்சிகள் கட்டுப்படுத்துவது கட்டாயமானதாகும்.

# பல நாடுகள் பனை தயாரிப்புக்களை கொள்வனவு செய்ய தயாராகவுள்ளன

## மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தகவல்

(மட்டக்களப்பு)

கனடா, தாய்லாந்து, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் பனை மரத்தினுடைய முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றின் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்குத் தயாராக இருக்கின்றன.

பனை மரங்களை வளர்ப்பதில் எமது மக்கள் ஆர்வம் காட்டினால் அவற்றின் தயாரிப்புக்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப நான் தயாராகவுள்ளேன் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சினால் மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனையில் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட 78 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் உரையாற்றினார்.

முறக்கொட்டாஞ்சேனையில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 8 லட்சம் பெறுமதியான 78 வீடுகள் வழங்கப்பட்டன.

35 வருடத்துக்குப் பின்னர் பனை தொடர்பான கண்காட்சி கொழும்பு கோல்பேசில் நடைபெறுகிறது.

பனை தொடர்பான உற்பத்திகளை வெளிநாடு களுக்கும் அனுப்புவதற்காகத்தான் கடமையாற்றுகிறேன் என்று தெரிவித்த அமைச்சர், தமிழ் மக்கள் 40 வருட போரின் மூலமாக அவர்களுடைய சரித்திரமே அழிந்து போய் விட்டது. ஒரு சமுதாயமே அழிந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். அதற்கு ஏற்ற விதத்திலே வாழ்வாதாரமே அடுத்த வேளையை எவ்வாறு கொண்டு செல்வது என்ற கவலையில் பலர் இருக்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

அடுத்து வேளையை எவ்வாறு கொண்டு செல்வது என்ற கவலையில் பலர் இருக்கின்றீர்கள். இங்கு கிழக்கில் மாத்திரமல்ல வடக்கிலுமிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அமைச்சின் மூலமாக சீர் செய்வதற்கான திட்டங்களை அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன. அனைவருக்கும் வீடுகள் வழங்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாக உள்ளது. மக்கள் கொட்டில்களில் வாழ்கின்றனர்.

அந்த மக்களுக்கு வாழ்வாதார உதவி வழங்க எங்களது அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முறக்கொட்டாஞ்சேனையில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள அரிசி ஆலையை புனரமைத்து தொழில் வாய்ப்புக்களுக்கும் ஒழுங்குகள் செய்யப்படும். நாங்கள் பணி செய்வது மக்களின் முன்னேற்றத்துக்காகவே. சமுதாயம் முன்னேற வேண்டும்.

சமுதாய முன்னேற்றத்துக்கான கடமையை ஏற்றுக் கொண்டுள்ள எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், அமைச்சின் செயலாளர் பி.சுரேஸ், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோரும், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன் பிரதி மற்றும் உதவித் திட்டமிடலாளர்களும் அதிகாரிகள் பயனாளிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (செ-11)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அந்த வேதவதி நாராயணனையே தன் நாயகனாய் வரித்துக்கொள்ளும் ஆவலில் இருக்கிறாள் என்பதை அறிந்த சீதை அவளையும் மனையாளாக ஏற்கச் சொல்லி இராமனிடம் இறைஞ்சினாள்.

இராம அவதாரத்தில் இராமன் ஏகபத்தினி விரதன். எனவே சீதையின் கோரிக்கையைச் சிரிப்புடன் மறுத்தான். அதுமட்டுமல்ல... அடுத்துவரும் துவாபர யுகம் முடிந்து கலியுகம் பிறந்தவுடன் வேங்கடாஜலபதியாக அவதரித்து வேதவதியைக் காதலித்துக் கரம்பற்றுவதாக வாக்களித்தான். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**எந்த நட்சத்திரத்தில் பெண் ருதுவானால் சாந்தி செய்து கொள்ளவேண்டும்?**

சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, மூலம், பூராடம் இந்த ஆறு நட்சத்திரங்களில் ருதுவானால் சாந்தி செய்து கொள்ளலாம். (தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைவனின் நிழல்



மனத்தின் இயக்க நிலைகளை இப்போது ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்வோம். ஜீவகாந்தமானது உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களின் விரைவான சுழற்சியினால் எழும் அலைகளே. ஒரு உடலில் உள்ள உயிர்ச்சக்தித் துகள்களிலிருந்து இவ்வாறு வெளியாகும் அலைகள் அனைத்தும் உடலில் சுழன்று கொண்டே இருக்கின்றன.

பொதுவாக, எந்த ஆற்றல் சுழற்சி பெற்றாலும் திண்மை உடைய பகுதி மத்தியில் போய்ச் சேர்வதும், லேசான பகுதி புறத்தே நிற்பதும் துல்லியச் சமதளச் சீர்மை (Specific Gravity) தத்துவம் ஆகும். இந்த இயல்பின்படி, ஜீவகாந்தத்தின் பெரும்பகுதி தனது சுழலியக்கத்தினால் உடலின் மையப் பகுதிக்கு வந்து சேருகிறது. அங்கு இறுகி, குறுகி அழுத்தம் பெற்று ஜீவகாந்த நிலைக்களமாக அமைகிறது. இதனைக் கருமையம் என்றும், ஆன்மா என்றும் வழங்குகிறோம்.

மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக் கொண்டிருக்கும், ஏற்படும் தாக்கங்கள் அனைத்தும் கருமையத்தில் போய்ச் சேருகின்றன. இந்த நிகழ்ச்சியை வினைப்பதிவு என்று கூறுகிறோம். பதிவு என்றால் இங்கு எழுதி விளக்கக் கூடியதோ, அல்லது புலன்களுக்கு எட்டும்படியாக அடையாளம் கொடுக்கக் கூடியதோ அன்று.

கருமையத்தில் இறுகிக் குறுகி, நிலை பெற்றிருக்கும் ஜீவகாந்த அழுத்தம் ஒவ்வொரு செயல் அல்லது அனுபோக அனுபவங்களுக்கும் ஏற்ப, தரமாற்றம் பெற்றுக் கொண்டே இருக்கிறது. அப்படி மாற்றம் பெற்ற தன்மைகள் அதே மன அலைச் சுழல் மறுபடியும் வரும்போது, மூளையின் காந்த அலைகளால் விரித்துக் காட்டப்படுகிறது. அப்பொழுது உண்டாகும் அகக்காட்சியே எண்ணங்கள். இறைநிலைக்கும் மன நிலைக்கும் உள்ள தொடர்பை உணர வேண்டும் என்றால், அவற்றை உருவத்துக்கும், அதிலிருந்து தோன்றும் நிழலுக்கும் ஒப்பிடலாம். உருவத்தை விட்டு நிழல் பிரிவதே இல்லை. ஆனால், நிழலை எடுத்துக்[illegible] ஒளியானது உருவத்தின் மீது படும் கோணத்திற்கு ஏற்ப, நிழலானது அளவில் மாறுபடும். அது போன்று மனிதமனம் இறைநிலையை விடுத்து இயங்குவதே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி முழங்காவில் விநாயகரை வென்றது AB



AB எதிர் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழகத்திற்கு இடையிலான சிநேகபூர்வமான 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட போட்டியில் (26/08/2017) சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற விநாயகர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் 27பந்துப் பரிமாற்றத்தில் அனைத்து இலக்குகளையும் இழந்து 72 ஓட்டங்களை பெற்றது.

விநாயகர் சார்பாக துடுப்பாட்டத்தில் லக்ஷன் 17,நிசாந்தன் 10 ஓட்டங்களை பெற்றனர்.

AB சார்பாக பந்து வீச்சில் சசிகரன் 6பந்துப் பரிமாற்றங்கள் வீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும் உத்தமன் 7 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 14 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் விஷ்ணு 6 பந்து பரிமாற்றங்கள் வீசி 8 ஓட்டங் களுக்கு 2 இலக்கையும் கைப்பற் றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய AB 11.4 பந்துப் பரிமாற்றத்தில் 4இலக்குகளை இழந்து 73ஓ ட்டங்களை பெற்று வெற்றியினை பெற்றது. இதில் AB சார்பாக ஞானா 21*, லிங்கநாதன் 12, உத்தமன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விநாயகர் சார்பாக டிலக்ஷன் 6 பந்துப் பரிமாற்றங்களை வீசி 20 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியில் AB 6 இலக்குகளால் வெற்றி பெற்றதுடன் AB யின் 6ஆவது தொடர்வெற்றியையும்பதிவு செய்தது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக உத்தமன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## கரப்பந்தாட்ட போட்டி

அம்பாள்குளம் இளந்தென்றல் விளையாட்டுக்கழகத்தினால் அமரர் வரதராஜ் பிரபாகரனின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 31.08.2017 மற்றும் 01.09.2017 ஆம் திகதி அம்பாள்குளம் இளந்தென்றல் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள அணியினர்கீழ்வரும்தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மு.செல்வகுமார் 077 281 8951, பொ.லிங்கேஸ்வரன்- 077 883 8955.

வெற்றிபெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மகாலிங்கம் ஞாபகார்த்த

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி திருநெல்வேலி வி.கழகம் வெற்றி



யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங் கத்தினரால் நடத்தப்பட்டு வரும் வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த இருபது- 20 சுற்றுப்போட்டியில் திருநெல்வேலி விளையாட்டுக் கழகம் மூன்றாவது வெற்றியினைப் பதிவு செய்துள்ளது.

(26.08.2017) அன்று நடை பெற்ற போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றி பெற்ற திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெ டுத்தாடிய நியூ ஸ்டார்ஸ் அணியி னர் இருபது பந்து மாற்றங்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 115 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் சிவராஜ் 2 இலக்கு களையும் ஜசிந்தன் 2 இலக்குக ளையும் பிரபவன் 2 இலக்குக ளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி விளையாட்டுக் கழகம் 15.4 பந்து பரிமாற்றத்தில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் தர்ஷிகன் 37 ஓட்டங்களையும் அசோக் 33 ஓட்டங்களையும் பெற்றனர். திருநெல்வேலி விளையாட்டு கழகம் 7 இலக்குகளால் வெற்றியைத் தமதாக்கிக் கொண்டது. (க)

## தேசபந்து தென்னக்கோன் வெற்றிக்கிண்ணத்தை வென்றது மன்னார் சென்.அன்ரனீஸ் வி.கழகம்

வவுனியா மற்றும் மன்னார் கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தின் தேசபந்து தென்னக்கோன் வெற்றிக் கிண்ணமென்பந்து இறுதிச் சுற்றுப் போட்டியில் மன்னார் அணி வெற்றியீட்டிக் கொண்டுள்ளது.

வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில், வவுனியா நகர சபை மைதானத்தில் குறித்த மென் பந்து இறுதிச் சுற்றுப் போட்டி இடம் பெற்றது.

வவுனியா மற்றும் மன்னாரில் பொலிஸாரால் கடந்த ஒரு மாத காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நடமாடும் சேவையை முன்னிட்டு குறித்த போட்டி இடம் பெற்றது.மன்னார் சென்.அன்ரனீஸ் மற்றும் வவுனியா பூந்தோட்டம் அண்ணா அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஐந்து ஓவர்களைக் கொண்ட இறுதிச் சுற்றுப் போட்டியில் மன்னார் சென்.அன்ரனீஸ் அணி வெற்றி பெற்று முதலாவது பரிசினை தட்டிச் சென்றது.

போட்டியில் வெற்றி பெற்ற சென் அன்ரனீஸ் அணிக்கு வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோன் வெற்றிக் கிண்ணத்தையும் 25 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் வழங்கி வைத்தார்.

இரண்டாம் இடத்தினைப் பெ[illegible] அண்ணா கிரிக்கெட் அணியி[illegible]ருக்கு வெற்றிக் கிண்ணத்தையும் 15 ஆயிரம் ரூபா பரிசுத் தொகையினையும் வவுனியா மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சககர் எம்.என்.சிசிரகுமார வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வின்போது, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.மகிந்த, ரெலோ கட்சியின் இளைஞர் அணி தலைவர் ப.கார்த்திக், வவுனியா வர்த்தக சங்க செயலாளர் கோ. சிறிஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தர் எஸ். பிரதீபன், ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் ஏபிரகாம் ராகுலன் மற்று[illegible] பொலிஸ் அதிகாரிகள் என மேலும் பலர் கலந்து கொண்டிருந்ததோடு வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-250)





சைனிக் கழகத்தின் வைர விழாவை முன்னிட்டு இருபாலாருக்குமான மரதனோட்டமும் கழகங்களுக்கிடையிலான அஞ்சல் ஓட்டமும் தம்பதிகளுக்கான சைக்கிள் ஓட்டமும் 26. 08.2017 அன்று நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கில்...

ஆக்கப்பட்டவர்களின் (Enforced Disappeared) உறவுகள் தமது உறவுகளை வெளிப்படுத்தக்கோரி வடக்கு கிழக்கு மாகாணங்களில் 150 (180) நாட்களுக்கு மேலாக தொடர் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் இரவு பகலாக வெயில், மழை, பனியையும் பொருட்படுத்தாது எமது மக்களின் போராட்டம் தொடர்கின்றது. ஜனாதிபதி, பிரதமர், பல அமைச்சர்கள், சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை நேரில் சந்தித்தும், விண்ணப்பங்களை கையளித்தும் எதுவித பயனும் அளிக்கவில்லை.

இதனால் உடல், உளப்பாதிப்புக்குள்ளாகிய நிலையிலும் காணாமல் போன தமது குடும்ப உறவினர்களின் விடயத்தில் நீதி கேட்கும் நடவடிக்கையில் தளராமல் அசாதாரண நம்பிக்கையுடனும் அவர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் இவர்களுடைய போராட்டத்தை உதாசீனம் செய்வதுடன் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு முகம்கொடுப்பதற்காக காணாமற்போனோர் அலுவலகம் (Office of Missing Persons-OMP) எனும் சட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தியுள்ளது.

இச்சட்டமானது எமது மக்களை வலிந்து காணாமல் ஆக்கிய இராணுவம், பொலிஸ், துணைக்குழுக்கள் என்பவற்றை பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது என்பது இச்சட்டத்தின் பிரிவுகளை தெளிவுற வாசித்தவர்களுக்கு விளங்கும். இந்நிலையில் எந்தவொரு இராணுவத்தினரையும் (பாதுகாப்பு படையினரையும்) இச்சட்டம் பாதிப்பதற்கு அனுமதிக்கமாட்டோம் என ஜனாதிபதி தொடர்பகம் முதலாக பல்வேறு அரசாங்க எதிர்க்கட்சி, அரசியல்வாதிகள் ஆணித்தரமாக தெரிவித்துள்ளார்கள்.

அதுமட்டுமன்றி வடகிழக்கு தமிழர்களின பிரதிநிதிகள் எனக்கூறிக்கொள்ளும் தமிழ் கூட்டமைப்பு பிரதிநிதிகள் கூட இச்சட்டத்துக்கு ஆதரவாக இருப்பது கண்ணீர் கலந்த வேடிக்கையாக உள்ளது.

ஓகஸ்ட் 30ஆம் திகதி 2017 அன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள சர்வதேச காணாமல் போனவர்களது தினமாகும். இத்தினத்தை அமைதியாகவும் ஆக்கபூர்வமாகவும் நினைவு கூருவதற்கு காணாமல் போனோர் அமைப்பு வேண்டுகோள் விடுகின்றது.

வடக்கு கிழக்கின் 08 மாவட்டங்களிலும் உள்ள காணாமல் போனோர் அமைப்புக்களின் கிளைகள் தத்தமது மாவட்டங்களில் இத்தினத்தை அனுஷ்டித்து தமது காணாமற்போன உறவுகளுக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சார்பில் அழைப்பு விடுக்கிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட சட்டத்தின் (OMP) தற்போதுள்ள வரைவினை எதிர்ப்போம். (வரைவுடன் உடன்படவில்லை)

காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டத்தில் (OMP) (நாங்கள் ஈடுபட முன்னர் ஜனாதிபதி 12.06.17 அன்று எம்முடனான சந்திப்பில் எமக்களித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும்). காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டத்தில் பொறுப்புக்கூறும் பொறிமுறை நிச்சயம் உள்ளடக்கப்பட வேண்டும். யுத்தத்தில் இறுதி நாட்களில் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிடவேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் முழுமையான பெயர்ப்பட்டியலை வெளியிடவும், மறைக்கப்பட்ட இரகசிய சிறை முகாம்களில் உள்ளவர்களின் பெயர் பட்டியலை வெளியிடவும், காணாமல் ஆக்கப்பட்ட மக்கள் விரும்பும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவோம். காணாமல் ஆக்கப்பட்டதற்கு காரணமானவர்கள் அனைவரையும் விசாரிப்பதற்கும் தண்டிப்பதற்கும் நல்லாட்சி அரசு உடன்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த போராட்டத்தினை மேற்கொள்ளவுள்ளோம்.

அந்த வகையில் குறித்த தினத்தில் அந்தந்த மாவட்டங்களில் இடம்பெறும் காணாமல் போனவர்களின் உறவுகளின் போராட்டத்தில் கலந்து கொண்டு வலுச்சேர்க்குமாறு அனைவரிடத்திலும் கோரிக்கை விடுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## டெங்கு நோய்த்...

டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் யாழ்.மாவட்டத்தில் சடுதியாக இந்த வருடம் மிக மிக அதிகளவில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அதாவது நடப்பாண்டில் இதுவரை 3600 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளா கியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர். ஆனால் கடந்த 2016ஆம் ஆண்டு இந்த காலப்பகுதி வரை 600 பேர் மாத்திரமே டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர். இதன்படி நோய்த்தாக்கம் இம்முறை மிகவும் அதிகரித்து காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதிகமாக அரச திணைக்களங்கள், பாடசாலைகள், மற்றும் புதிய கட்டட வேலைகள் இடம்பெறும் பகுதிகளில் டெங்கு நோயை பரப்புக் கூடிய நுளம்புகள் பெருகி வருகின்றன. அவற்றில் சம்பந்தப்பட்ட அனைவரும் கவனத்தில் எடுத்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாரி காலம் ஆரம்பமாகவுள்ளதால் டெங்கின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புள்ள நிலையில் ஒவ்வொருவரும் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலர்கள், மாநகர சபை ஆணையாளர், பிரதேச சபை செயலாளர்கள் ஒவ்வொரு வாரமும் குறித்த டெங்கு தொடர்பான மீளாய்வு கூட்டங்களை நடத்த வேண்டும் எனவும் உயர்மட்டக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## கிரிக்கெட் மோசடி;...

த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணை அறிக்கை பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவினால், சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளாமல், நிதி மோசடி விசாரணை பிரிவினால் ஒன்றும் செய்ய முடியாதெனவும் அதன் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கிரிக்கெட் போட்டிகளில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான அர்ஜுன ரணதுங்க மற்றும் குமார் சங்கக்காரவுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுவதற்காக, பொலிஸ் விசாரணை நிதி மோசடி விசாரணை பிரிவிடம் இவ் விடயம் ஒப்படைக்கப்படும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அதற்கமைய ஒப்படைக்கப்பட்ட விசாரணை நடவடிக்கை ஒரு குறிப்பிடத்தக்க கட்டத்தை எட்டியுள்ளதாகவும், இது தொடர்பில் முக்கியஸ்தர்கள் சிலரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அர்ஜுன ரணதுங்க, குமார் சங்கக்கார, அரவிந்த டி சில்வா போன்ற பிரபல வீரர்களிடம் இது தொடர்பில் தகவல் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கிரிக்கெட் போட்டி தொடர்பில் சூதாட்டம் நடத்திய பிரபல வர்த்தகர்கள் இருவர் மீதும தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக குறித்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# தல தோனியின் அனுபவம் குறித்து என்னவென்று சொல்வது

## பயிற்சியாளர் ரவி சாஸ்திரி அசத்தல் டுவிட்

அனுபவத்தை வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது என தோனி தனது அனுபவத்தை நிரூபித்துள்ளார் என ரவி சாஸ்திரி புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய அணியின் சாதனைத் தலைவராக திகழ்ந்தவர் மகேந்திர சிங் தோனி. 36 வயதாகும் டோனி தற்போது ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட் போட்டிகளில் விக்கெட் காப்பாளராக பணியாற்றி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தோனியின் துடுப்பாட்டம் குறித்து விமர்சனம் எழும்பி வருகிறது. தோனியின் பினிஷிங் பணியில் சற்று தொய்வு ஏற்பட்டுள்ளது என்ற விமர்சனம் இருந்து வருகிறது.

பல்வேறு விமர்சனங்கள் வந்தாலும் தனது துடுப்பாட்டம் மூலம் பதிலடி கொடுத்து வருகிறார். பல்லேகலேயில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியா விரைவாக விக்கெட் இழந்தபோது, புவனேஸ்வர் குமார் உடன் இணைந்து தோனி பொறுமையான ஆட்டத்தை கொண்டு சென்றார். புவனேஸ்வர்குமாருக்கு அறிவுரை வழங்கிஅணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றார்.

தோனியின் அனுபவத்தை அனைவரும் பாராட்டினார்கள். இந்நிலையில் இந்த அணியின் தலைமை பயிற்சியாளர் தோனியின் அனுபவம் குறித்து புகழாரம் சூட்டியுள்ளார்.

இதுகுறித்து ரவி சாஸ்திரி தனது டுவிட்டர் பக்கத்தில் "அனுபவத்தை மார்க்கெட் போன்ற இடங்களில் வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது என்பதற்கு தோனி ஒரு அட்டகாச மான உதாரணம்" என்று பதிவு செய்துள்ளார்.

# சிறைச்சாலை இடப்பற்றாக்குறை

## கைதிகள் பலர் அசௌகரியம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை காரணமாக கைதிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

நகர்புரங்களிலுள்ள சிறைச்சாலைகளிலேயே இடப்பற்றாக்குறை காணப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 30 சிறைச்சாலைகளில் 18 ஆயிரத்து 500 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

1174 கைதிகளை தடுத்து வைக்கக்கூடிய கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் 3500 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

680 கைதிகளை தடுத்து வைக்கக்கூடிய வசதிகளை கொண்ட பொரளை மெகசின் சிறைச்சாலையில் தற்போது 1200 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு ரிமான்ட் சிறைச்சாலையில் 1000 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த சிறைச்சாலையில் 380 கைதிகள் தடுத்து வைப்பதற்கான இடவசதியே உள்ளது.

இதேவேளை நீர்கொழும்பு சிறைச்சாலையில் 680 கைதிகள் மாத்திரமே தடுத்து வைக்ககூடிய வசதிகள் உள்ள நிலையில், தற்போது 1100 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (செ)

## மதவழிபாட்டிடங்கள்...



குருநாகல் மாவட்டம் நாரம்பல பிரதேசத்திலே இந்த தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

அந்த பிரதேசத்தில் ஒருவார காலத்திற்குள் மூன்று இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள் நள்ளிரவு மற்றும் அதிகாலை வேளைகளில் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

கடந்த 23ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு இரு வழிபாட்டு தலங்கள் மீது கல் வீச்சு தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. இந்த தாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் வழிபாட்டு தலமொன்றின் உள்ளே சிறுநீர் கழித்தும் அசிங்கப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை நள்ளிரவு பொல்கஹாயா பள்ளிவாசல் மீதும் கல் வச்சு தாக்குதல் நடைபெற்றுள்ளது. இந்த தாக்குலில் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

எதிர்வரும் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹஜ் பெருநாள் பண்டிகைக்கு முஸ்லிம்கள் தயாராகி வருகின்ற இவ்வேளையில், இது போன்ற தாக்குதல்கள் அந்த பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் ஒரு வித அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பள்ளிவாசல் மீதான தாக்குதல்களின் பின்னணி கண்டறியப்பட்டு சூத்திரதாரிகள் இனம் காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுக்காலையில் வட மேல் மாகாண துணை பொலிஸ்மா அதிபர் ஜகத் அபேய சிறிகுணவர்த்தனாவை தொடர்பு கொண்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்த கோரிக்கையை வலியுறுத்தியுள்ளதாக அமைச்சக ஊடகப் பிரிவு கூறுகின்றது.

இதனிடையே, இறுதியாக நடைபெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பள்ளிவாசலுக்கு அண்மித்த வியாபார நிலையமொன்றில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கமரா ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இந்த கைதுகள் நடைபெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இலங்கையில் இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள் மீதான தாக்குதல்கள் மீண்டும் தலைதூக்க தொடங்கியிருப்பதாக முஸ்லிம் சமூகத்தினரால் கவலை வெளியிடப்பட்டுள்ளது. (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

வம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ)

## எதிரிகளுடைய...

மன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் காலை 9 மணிக்கு யாழ் மேல் நீதிமன்றின் மூன்றாம் மாடியில் ஆரம்பமாகவுள்ளது.

வழக்கு தொடுநர் தரப்பில் பிரதி மன்றாதிபதி பி.குமாரரட்ணம் மற்றும் அரச சட்டவாதிகளான நரகரட்ணம் நிஸாந்த், ஜெயலக்ஸி சில்வா, மாதுரி விக்னேஸ்வரன் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தனர். வழக்கு தொடுநர் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்துள்ள நிலையில் இன்றில் இருந்து எதிரிகளின் வாக்கு மூலம் மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியங்கள் பதிவுசெய்யப்படவுள்ளன. (செ-9)

## குடும்பப் பெண்...

வதைக் கண்டு அதிர்ச்சியடைந்து ஈச்சங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதன் பின்பு சடலம் மீட்கப்பட்டு பிரேத மற்றும் மரண விசாரணைகளுக்காக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் 8 மாத குழந்தை ஒன்றின் தாய் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர். (செ-250)


**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

பத்மகிரி சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாய் எனும் முகவரியில் 11 பரப்பு றோட்டுக் கரை காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
குறிப்பு: மாகியப்பிட்டி சந்தைக்கு அருகாமையில்.

தொடர்பு:
0775433363 (C-8445)


## தீ விபத்து பெண்...

குறித்த பகுதியில் பிரஸ்தாப பெண் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது தீ பரவல் இடம்பெற்றுள்ளது.

வேகமாக பரவிய தீயினால் கடையில் இருந்த பொருட்கள் முழுமையாக தீக்கிரையானதுடன், வீட்டுப் பாவனை பொருட்கள் உள்ளிட்டவையும் தீக்கிரையாகியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த இளம் பெண் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம்தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (செ-312)

## வவுனியாவில் 30...

மறுதினம் 30 ஆம் திகதி வவுனியாவில் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இந்த கவனயீர்ப்பு போராட்டமும், கூட்டமும் வடக்கிலும் கிழக்கிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குரல் அமைப்பினவூடாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பினர் தெரிவிகையில், எதிர்வரும் 30-ம் திகதி சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, அன்றைய தினம் வவுனியா நகரப்பகுதியில் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கும் பேரணி வவுனியா மாநகர சபை மண்டபத்திற்கு வந்தடைந்ததும் சிறப்புரைகள் இடம்பெற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவு பெறும்.

இனவிடுதலை போராட்டத்தில் தமிழர் என்ற காரணத்திற்காகவே பேரினவாத அரசினால் காணாமல் ஆக்கப்பட்டோர் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அடங்கும். தங்கள் உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதனால் பல துன்பங்களை அனுபவித்து வரும் எமது மக்களின் நீதி கோரும் புனித பயணத்தில் தமிழ் தேசியப் பற்றுக் கொண்ட அனைவரையும் அணிதிரளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)


**V2 TRAVELS**




வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
**VISA EXTENSION**
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)
(C-9383)

0768227499

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை


## நீதிமன்று, நாடா...

வருகைதந்திருந்த போதே அவர் இந்த கருத்தைக் கூறியுள்ளார்.

பெல்லன்வில வீதிப் பெரஹரவிற்கு முன்னதாக விகாரைக்கு வருகைதந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னதாக மத வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

இதன்போது மகிந்த ராஜபக்ஷ தரப்பினருக்கு எதிரான வழக்குகளை தாமதப்படுத்துவதாக குற்றஞ்சாட்டப்பட்டு பதவி விலக்கப்பட்ட முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் பிரசன்னமாகியிருந்தார்.

சமய வழிபாடுகளின் பின்னர் அங்கிருந்த வெளியேறிய மகிந்த ராஜபக்ஷவிடம், அரசாங்கம் கொண்டுவந்துள்ள 20 ஆவது சட்டத் திருத்தம் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதன்போது கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ,

20 ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைத் தேர்தல்களை பிற்போடுவது முற்றிலும் தவறானது. சாதாரணமாக அரசியல் உரிமையை இல்லாது செய்ய முடியாது. பாரிய அளவில் பிரதேச சபை உறுப்பினர்கள் மத்தியில் அரச உத்தியோகத்தர்களே இருக்கின்றனர்.

சமுர்த்தி அதிகாரிகள், கமநல அதிகாரிகள் உள்ளிட்ட அரச ஊழியர்கள் உள்ளனர். அந்த அதிகாரிகளுக்கு இவ்வளவு காலமும் இருந்த உரிமையை ஒரே தடவையில் பறித்தெடுக்கும் செயற்பாடே இது. அரசியலமைப்பின் பிரகாரம் இது தவறானது. நல்லாட்சி என்று கூறிக்கொள்பவர்கள் இன்று நாடாளுமன்றத்தை ஏமாற்றியுள்ளனர். எங்களை ஏமாற்றியுள்ளனர். நீதிமன்றத்தையும் ஏமாற்றியுள்ளனர். நீதிமன்றத்திற்கு முன்னால் கொண்டு சென்று சட்டமூலத்தை கொண்டு வந்து அதன் பின்னர் 52 திருத்தங்களை சமர்ப்பித்தனர்.

52 திருத்தங்களுக்குள் தான் அரச சேவையாளர்களின் பிரஜைகளுக்குள்ள உரிமையை மறுக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது அவர்களின் உரிமை. அவர்களுக்கு உள்ள அரசியல்உரிமை. உரிமையை மறுக்கின்றமை, முற்றுமுழுதாக அரசியலமைப்பை மீறும் செயலாகும்.

இதுவொரு பழிவாங்கும் நடவடிக்கை என்றே நான் நம்புகின்றேன். ஏனெனில் தோல்வி அடைவோம் என அவர்களுக்கு தெரியும். ஆகவே தோல்வி அடைவதற்கு உள்ள அச்சத்தில் இந்த நிலைமை உருவாகியுள்ளது. எனினும் நாம் அச்சமடையத் தேவையில்லை.பிரதேச சபைத் தேர்தல்களில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி அடைவோம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார். (செ-11)

## முன்பள்ளி ஆசிரி...

உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் முன்பள்ளி ஆசிரியை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் மட்டுவில் தெற்கு வின்சன் வீதியைச் சேர்ந்த ஜெயசேகரம் ஜெயரூபி (வயது 29) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பெற்றோர்களை இழந்த குறித்த பெண் கொழும்பில் முன்பள்ளியொன்றில் ஆசிரியையாக பணி புரிந்து வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்ற நிலையில்.

குறித்த சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-8)


**முக்கிய அறிவித்தல்**

கடந்த 15.09.1999அன்று முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் பகுதியில் விமானத் தாக்குதலில் 26 பொதுமக்கள் உயிர் நீத்தனர். அவர்களின் நினைவு நாள் எதிர்வரும் 15.09.2017 அன்று கடைப்பிடிக்க உள்ளதால், உயிர்நீத்த பொதுமக்களின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்களை தொடர்பு கொள்ளுமாறு வன்னிக்குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பினர் அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

.::நன்றி::.

தகவல்: **வன்னிக்குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பு வன்னி**

தொடர்பு: **076 572 3137**
(C-8347)



**எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்**



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங்கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)
(9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

● அனைத்து சேவைகளும் மிகு குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

**UK - 550/=** (C-9382)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
**CANADA - 400/=** மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



**விற்பனைக்கு**

பாவித்த தச்சுவேலை இயந்திரங்கள் (பட்டறை) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 353 8419 (242)



**பணியாளர் தேவை**

நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.நகரில் இருந்து 3km தூரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் பெண் பணியாளர்கள் தேவை. வயதெல்லை 18 - 35 வரை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:
(243) 021 221 5777, 077 516 4928



**தேவை**

தையல் நிலையம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இரு பாலாரும் தொடர்பு கொள்ளலாம். தேவை ஏற்படின் தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்பு:
(241) 077 625 3811, 077 844 9170



**விற்பனைக்கு**

தரமான கொங்கிறீற் கல் விற்பனைக்கு உண்டு.
விலை - 40/=

தொடர்பு:
078 615 5929 (244)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org